REGISTRAR

உ

கண்ணன் துணை



மஹாபாரதம் 17-நாள்

# கர்ணன் சண்டை வர்ணிப்பு.

இஃது

முத்தமிழ் க்ஷேத்திர மதுரைமாநகரத்தில்

கள்ளழகர் வர்ணிப்பில் பிரசித்திபெற்ற

நா. மா. முத்திருள நாடார்

அவர்களாலியற்றியது.

மதுரை அம்மன் சந்நிதி

ஷம்ஸியா அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

விலை] — [அணா 14.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

உ

கண்ணன் துணை



மஹா பாரதம் 17-நாள்

# கர்ணன் சண்டை வர்ணிப்பு.

இஃது

முத்தமிழ் க்ஷேத்திர மதுரைமாநகரத்தில்

கள்ளழகர் வர்ணிப்பில் பிரசித்திபெற்ற

**நா. மா. முத்திருள நாடார்**

அவர்களாலியற்றியது

இஃது

மதுரை, அம்மன் சந்நிதி

ஷம்ஸியா அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1924.

# முகவுரை.

மதுரை தெற்குவாசல் செட்டியூரணித்தெருவில் வசிக்கும் மாயாண்டி நாடார் குமாரனாகிய நான் அழகர் உற்சவத்திற்கு பாரதத்தில் பதினேழாம் நாள் சண்டையை வர்ணிப்பாய் பாடும்படியாய் அனேகர் கேட்டுக் கொண்டதால் நான் யாவருக்கும் தெரியும்படி சாதாரண செந்தமிழாய்ப் பாடியிருக்கிறேன்.

இது சம்மந்தமான இன்னும் சில புத்தகங்களும் தயாரு கின்றன. கூடிய சீக்கிரம் வெளிவரும்.

இப்படிக்கு,

நா. மா. முத்திருள நாடார்.

உ

கண்ணன் துணை.

# கர்ணன் சண்டை வர்ணிப்பு.

## விருத்தம்.

தசரத குமாரனாகி தாரணியில் வந்துதித்து
தஜமுக ராவணன்தான் ஜானகிதனைக் கொண்டேக
புஜபலத் துடன்குரங்கைபோற் சேனையாக காட்டி
நிஜமாய் ராவணனைவென்ற நிர்மலப் பொருளேபோற்றி

ஹரிஓம் நன்றாகவென்று-நான்மறையிற்சொன்னபடி
ஆதிகுரு வாழ்கவென்று
தெரிந்து முன்னோர்சொன்னபடி-என்குருவே துணையென்று
திருவடியைப்போற்றி செய்து
சகலபொருளாய் நிறைந்த-பரபிர்மஜோதி
தயாபரி தாயார் பாதம்
ஜெகத்திலெப்போதும்போற்றி-சகலதேவதையின்
திருவடியை ஸ்தோத்தரித்து
ஆதிமூலப்பொருளாய்-அரசடியை யமர்ந்த
ஐங்கரவிநாயகரே
இந்திராதி தேவதைகள்-சூரபத்மாவின்
இடஞ்சல் தனக்காற்றாமல்
தந்திரமாய் தன்னுடைய- அமராபதிநகரை
தான் விட்டுப்பூவுகில்
சிந்தை மிக மகிழ்ந்து-நந்தவனம் வைத்து
சிவ பூஜை செய்துவந்தார்
பாகசாதனனும் இந்தப்-படி பூசைசெய்ய
பஞ்சகாலம் பிறந்தே
வருஷமது பன்னிரண்டு- மழையில்லாதாலே
வாடினதே பூஞ்செடிகள்
திரிலோகராஜனனும்-தேவேந்திரனும்.
சிவபூஜை செய்வதற்கு
பத்திர புஷ்பமில்லாமல்-மனதே வருந்தி
பாஷாங்குச சக்கரனே

சித்தி விநாயகனே - தண்ணீர்வேணுமென்று
செய்தானருந்தவசு
கருணைபுரிந்தே நீயும் - அகத்தீஸ்பரர் கொண்டு வந்த
கங்கைதனைத் தந்திரமாய்
காகவடிவோடு சென்று - கவுத்தி இந்திரனுக்கு
கங்கை தந்த ஐங்கரனே
கெஜமுகசூரனையே - கோட்டால் வதைத்து
கெர்வந்தனை அடக்கி
வசமாய்ப்பெருச்சாளி - வாகனமாய்க்கொண்ட
வல்லபையாள் நாயகனே
உனது பாதாரமதில் - அனேக புஸ்பத்தால்
உகந்தர்ச்சனைபுரிந்து
பணிந்தேன் பிரணவமே - எந்தனுடகல்வியையிப்
பாவலர்கள் கொண்டாட
அனுக்கிரகஞ்செய்திடுவீர் - திருமூர்த்திதேவர்க்
காதாரமாம்பொருளே
ஜோதிமயமாய் விளங்கும் - சரணாரவிந்தம்
துதித்தேசதாகாலம்
பாதிமதிகொன்றையணி - பரமசிவனார்க்கு
பரமரகசியமதனை
நீதிகுருவாய்மொழிந்த - சுப்பிரமணியர் பாதம்
நெஞ்சிலெப்போதும் நினைத்து
சூரனுடனே அசுரர் - குலமறுத்துத்தேவ
குஞ்சரியை மாலையிட்டு
காரணசற்குருவாகிப் - பரங்குன்றத்திருந்து
காட்சி தரும் சுப்ரமண்யம்
செந்தாமரைப்பாதம் - சிவசத்திபாதம்
செங்கண்மால் பொற்பாதம்
சேவடியையும் போற்றி - யீரேழுலகும்
செந்தாமரைப்பிரமன்
தன்னையுந்திக்கமலந் - தனிலேபடைத்த
தாமோதரப்பெருமாள்

எண றுந் துணையாகி-ரக்ஷிக்கும் நாரணனு
ரிருபாதமே போற்றி
பாலாழியிற் றுயின்ருய்-பாக்கியர்களிருவர்
பணிசெய்புமாயோனே
மாதாவே மாரியம்மாள்-யின்னவருடைய
மனதிலுயர் செங்கரும்பே
கண்ணுயிரமுடைய-கங்காளரூபி
கன்னியம்மா நீ வா வா
மண்ணுலகெல்லாம் நிறைந்த-கண்ணுடையமாதா
மங்கையரே வா வா
வடமதுரையெல்லையது-ஆயர்பாடியிலே
வந்துதித்தாய் மாரியம்மா
வடமதுரை பாடிவிட்டு-சாமுண்டியம்மா
வருவாய் நீ மாதாவே
மேலமலையாளமதில்-பகவதியாய் நின்று
மெய்பாய் விளையாடும்
சீலமுள்ள மாரியம்மா-மலையாளம் விட்டு
சீக்கிரமே வாருமம்மா
சமையபுரமேவாழும்-சங்கரிமாதங்கி
சௌந்தரியே மாரியம்மா
சமையபுரந்தன்னைவிட்டு-வாகனத்திலேறி
தான்வருவாய் சீக்கிரத்தில்
தில்லைமாகாளியென்று-பேருருவெடுத்து
சிவனோடு வாதாடி
தில்லையிலிருந்தவளே-எக்காளதேவி
சீக்கிரத்தில் வாருமம்மா
விராடபுர தேசமதில்-மயான பூமியிலே
வீற்றிருந்த பாண்டவர்கள்
பலவாயுதங்கள் தனைக்-காத்துக்கொடுத்து
பார்த்தனுக்குமே துணையாய்
மாடுபிடிசண்டையிலே-துணையாயிருந்து
மாசேனையைவதைத்து

ஓடிப்படியடித்துச்-ஜெயம்பெறச் செய்த
உத்தமியே வாருமம்மா
தக்கன்யாகாதிதனை அழிக்கவேவந்த
தாயாபரியே வாருமம்மா
திக்குக்கடங்காதவளே முத்துமாலையணிந்த
திரிபுரையே வாருமம்மா
தற்பரையாய்நீயிருந்து உலகந்தனிலே
தனிக்குட்டிரத்தமொடு
அற்புதமாய்சேவலொடு பன்றிஎருமை
அதிலுதிறங்காவுகொண்டாய்
தெய்வமுன்னைப்போலுலகிற் கண்டதேயில்லை
தேவிபராசத்தியம்மா
ஆணிமுத்துமாலையது அசைந்திடச்சொங்கையிலே
அன்பாகப்பாலொழுக
வந்தேவரந்தருவாய் மானிடரைக்காக்கும்
மாதவேமாரியம்மா
பூசித்தபேர்களுக்கு விக்கினம் வாராமல்
பூரணியே காத்தருள்நீ
நேசித்தபேர்களுக்கு யிடையூறுசெய்த
நெட்டூர்ப்பாவிகளே
சித்தரவதை செய்யுகின்ற ஆயிமாகம்மாயி
சிங்கார ரூபியரே
பத்தருக்குவேண்டவரம் பாலித்தாட்கொண்ட
பராபரை யென்றனந்தம்
தோத்திரஞ்செய்தேபணிந்து கதைபாட அருள்கொண்டு
தொடங்கினேன் சபையோர்கள்
நேத்தியாயாவர்களும் கேட்டுமன மகிழ்ந்து
நெடுமால் பதமடைவீர்
சந்தோஷமாகஔவை உனக்கு அபிஷேகந்
தான்செய்தலங்கரித்து
பழந்தேங்காய்கனிவகைகள் அன்னம்பலகாரம்
பாங்காகவே குவித்து

வள்ளையுள்ள பொற்பூவா லர்ச்சனைகள் செய்து
வாசனையோடேதூபம்
தீபமதுவுங்காட்டி பதினெண் வாத்தியமும்
திரமாய் முழங்கிடவே
சோபமரப்பூஜைசெய்த ஔவையைக்கார்த்த
ஜோதிவிக்னேஸ்பரனே

---

## கதையின்வரலாறு

சீராரும் வேதாந்த ஞானகணபதி பாதம்
சிந்தையிலெப்பொழுதும்
மாராமலே தொழுது புராணம் பதினெட்டும்
மானிலத்தோர் தானறிய
வசனித்தவியாசமுனி பாதாரவிந்தமதை
மனதிலே போற்றிசெய்து
திசையரசர் தான்பணியும் ஜெனமேஜெயராஜனுக்கு
சேர்ந்தகர்மம் நீங்கிடவே
வைசம்பாயன முனிவர் பதினெட்டு நாள்செய்த
மாபாரதப்போரை
மாசகலச் சொன்னபடி உலகில் நிறைந்த
மதிவல்லோர் தானறிய
வர்ணிப்பாய் பாடுகிறேன் சகலகலைஉணர்ந்த
மாசிலாப்பாவலர்கள்
கருணையுடனேகேட்டு ஆசீர்வாதஞ்செய்யக்
கைதொழுதேன் மாசபைக்கே
பாண்டவர்கள் காடுசென்று அக்யாத வாசமொடு
பதிமூன்றாண்டுங்கழித்து
ஆண்டகையை போற்றிசெய்து உபலாவியத்தில்
அபிமன் மணமுடித்து
வணங்காமுடியனிடம் நாடுதாவென்று
மாதவனை தூதனுப்பி

இணங்காதவாறுகண்டு தங்களைச்சேர்ந்த
ஏழு அக்ரோணி படைகளுடன்
நாலுவகைச் சேனையொடு குருச்சேத்திரம்வந்து
நாரணனர் சொற்படியே
மேலான வீரர்புகழ் நல்லரவான்தன்னை
வீரமாகாளியற்கு
களபலி பூசைமுடித்து ஆயுதங்களை யெடுத்து
கடவுள்தனை ஸ்தோத்தரித்து
அளவில்லாத சேனையது சூழ்ந்து மகிழ்வாக
ஐவருமிருந்திடவே
தருமரொடு பஞ்சவரை கார்க்க உருதிஞானம்
தானுரைத்து மாயவனும்
சரியாய்ச் சமர்பொருதி பதினறுநாள்யுத்தம்
சாரங்கன் தான்முடித்து
பதினேழாம்நாள் போர்தனிலே அர்ச்சுனனுக்கு ரதம்
பட்சமால் ஓட்டினதை
ஆசானருளதினல் பெரியோர் சபையில்
அன்பாகபாடுவதில்
கூடியிசை சீர்தளைகள் குறைந்தாலும் பொருத்து
குணமாய் மகிழ்வீரே
தென்மதுரை ஆதியிலே மாதமும்மாரி
தீவிரமதாய்ப் பொழிய
அன்பாய் வருஷமதில் முப்போகம்விளைய
ஆறினிலே வோர்கடமை
வாங்கியரசன்உயிர்போல் மன்னுயிரைக்காக்க
வாழுமரசன் நிலைக்க
ஏங்காமல் கைலைமலை சோமசுந்தரேசர்
எழுந்துவந்து ராஜாவாய்
ஆண்டு அறுபத்திநாலு திருவிளையாடல்
அன்பாக வேமுடித்து
தாண்டவஞ்செய் யீஸ்வரனர் வாழ்மதுரைதெற்கு
வாசல்செட்டி பூரணியாம்

தெருவிலேமுன்னாளில் பெரியோர் கிருபையதால்
 தேவபக்தி யிற்சிறந்த
சாத்மீக குணமுடைய மாயாண்டிநாடார்
 தவத்தால் உதித்தமைந்தன்
காருண்ணியம் சிந்தைபெற்ற முத்திருளநாடார்
 கணிவாயுரைத்ததுமே
கடவுள்தனைத்தொழுது தருமர்பதினேழாநாள்
 காலைக் கடன்முடித்து
திடமான வேதியர்க்கும் யாசகர்பாவலர்க்கும்
 சிறப்பாகத் தானதர்மம்
வேணமட்டுந் தான்கொடுத்து சகலராஜாக்களும்
 விமரிசையா யுண்டெழுந்து
வானவர்கள் கொண்டாட நால்வகைச்சேனைகளும்
 வந்துபஞ்ச பாண்டவரை
கோபாலகிருஷ்ணரையும் பணிந்துவிடைபெற்று
 கோடிபடை முன்னடக்க
மாவீர திட்டதுய்மன் சேனாபதியாகி
 மந்திராத மீதிருக்க
ரணபேரிகைமுழங்க சகலவாத்தியமொலிக்க
 சங்கமெங்குந் தானூதி
கனமான சேனையையும் எதிர்த்தவீரரையும்
 கண்டதுண்டஞ் செய்வதென்று
முன்னணியில் வந்துநின்றார் அந்தச்சமயம்
 முகுந்தனுமே தானெழுந்து
அன்று அக்கினிபகவான் காண்டாவனதகனம்
 அப்போது தான் கொடுத்த
சொர்ணமணியோசையிடும் அழியாரதத்தில்
 சுவேதவான்புரவிதனை
கண்ணன் அலங்கரித்து கழுத்தில் இரத்தினமாலையிட்டு
 காலிலே வீரதண்டை
பூட்டியேஉச்சிதனில் சொர்ணத்துராவணிந்து
 சுந்தராசன் தேர்மேலே

நாட்டியக்குதிரைகட்டி அனுமக்கொடியை
நாட்டினார்தேர்மேலே
தன்கையில் தார்க்கோலும் நவரத்தினக்குள்ளா
தாமோதரனணிந்து
அன்றுதான் கர்ணனுக்கு காட்சிதரவேணுமென்று
ஆண்டவனார் தானினைந்து
தருமர்முன்னே வந்திடவே சாமியைக்கண்டு
தானெழுந்தேவோடி வந்து
க்ஷீராப்தியிற்றுயின்ற செங்கண் நெடுமாலே
ஸ்ரீதர நாராயணனே
மாறுமற்பாண்டவரை காத்துரக்ஷித்த
மணிவண்ணா கேசவனே
கருணாகரப்பொருளே காயாம்புவண்ணா
கண்ணாவுன் பாதமல்லால்
என்றைக்கும் வேறுகெதி மனதிலேயில்லை
எம்பெருமானே கேளும்
குன்றைக் குடைபிடித்தோய் பனிரெண்டாம்போரில்
கொடியபகதத்தன் விட்ட
வேலாயுதந்தனையே உன்மார்பிலேற்று
விஜயனையன்னாள் காத்தாய்
பாலனுக்காகச்சபதம் பண்ணிய சொற்படியே
பதினாலாநாள் தனிலே
சதாயுவுக்கீஷன் கொடுத்த வச்சிராயுதத்தை
தான்சுழட்டி எறிந்திடவே
கதையால்மரணமென்று தெரிந்து உன்மார்பில்
கர்த்தனேயேற்றதினால்
அர்ச்சுணன் ஜெயம்பெறவும் சதாயுமடிந்தான்
அப்போதுங்காத்ததன்றி
பச்சைமாலே நீயும் அர்ச்சுணன் தீயில்
பஸ்பமாய்போகாமல்
சூரியனையும்மறைத்து சயிந்தவனைக்கொன்று
சொன்னசபதம் முடித்தாய்

வீரியமாயின்று தினம் கர்ணமஹாராஜன்
விஜயன் தலையருக்க
வளர்த்த நாகாஸ்திரமும் சல்லியன்தேரூர
வருவான் சேனுபதியாய்
துளபமணி மாயவனே நாகாஸ்திரத்தால்
துன்பம் வாராதபடி
கார்த்தபொருள் தனையே கடைபோகக்கார்ப்பாய்
கண்ணனே என்றுசொல்லி
பார்த்தன் கையைப்பிடித்து கிருஷ்ணனிடங்கொடுத்து
பணிந்து நின்று தருமரவர்
அஞ்சனவண்ணமாயா ஆதிமகாமூல
ஐயாபஞ்சாயுதனே
இன்றுசெய்யும் போர்தனிலே கர்ணனிரப்பானு
எங்களையே கொல்வானு
கன்றால்விளாவெறிந்த கண்ணுசொல்வீரென்று
கவலையொடு கேட்டிடவே
சிறிய அணுவும் பெரிய அண்டமுந்தானுகச்
சிறந்தெங்குமே நிறைந்த
திருமால் மனமகிழ்ந்து தருமரேகேளும்
தேவர்முதல்ராஜாக்கள்
கருணராஜன் தனக்கு உதவிசெய்திடவே
கருதிவந்து போர்செயினும்
இன்றையப்போர்தனிலே திரியோதனனுக்கு
இளையோர்கள் யாவரையும்
அன்று ராஜசபைதனிலே வீமராஜனுரைத்த
ஆனசபதப்படியே
துர்ச்சாதனனேடு யிளைஞர் யாவரையும்
தோழறுத்து காலைவெட்டி
யிச்சைப்படியாக கதாயுதத்தாலடித்து
இரத்தவெள்ளமாரோட
தலைமூளைசிதறிவிழக் கொன்று துர்ச்சாதனனை
தானடித்து ரத்தமுண்டு

சிலையழகி துரோபதையின் விரித்தகூந்தல் முடிக்க
செய்தேகருணனிடம்
நின்றமகாவீரரையும் யானைகுதிரைசேனை
நிரைந்ததொரு வேந்தரையும்
கண்டகண்டதுண்டமதாய் வெட்டிநாசம் செய்து
கரியரெத்தவெள்ளமதில்
யானைகள் கைகாலருத்து வால்தலையருந்து
வயற்றின் குடல்மிதக்க
சேனைவீரத்தலைவர் உடல்சின்னபட்டு
சிதறியேதான்விழுக
பரிகள் கடிவாளமொடு அங்குபடிசேணம்
பட்டத்துராவனந்தம்
சிறியோர்கள் வாழ்வதுபோல் ரத்தவெள்ளத்தில்
திசாதிசைகளோடிடவும்
ஓடும்ரெத்தவெள்ளமதில் குரைத்தலைப்பூதங்கள்
உண்டுரத்தமாமிசத்தை
கடித்துமெத்தக்கொண்டாடி நாடகமாடிடவும்
காளிகூளிபேய்கணங்கள்
நாய்நரிகாக்காய்கழுகு மூளைகளைத்தின்று
நல்விரவிலோசையிட
பேய்க்கேவிருந்துசெய்து சூரியகுமாரன்
பெலமாகநிற்கின்ற
கா்ண்ணிடம் போா்நடத்தி நாகபாஷக்கணையை
கண்டதுண்டமாய்க்கிழித்து
வா்ணமணித் தோ்குதிரை குடைகொடியறுத்து
சாரதியாய் தானிருக்கும்
சல்லியனையும் விரட்டி கா்ணனைக்கொன்றுங்கள்
சபதம் நிறைவேற்றி
வல்லமையாய் வந்திட்லாம் தா்மந்தலைகாக்கும்
மன்னவனேன்யஞ்சாதீா்
வெகுநாளாய்பஞ்சவரே உங்கள்மேல்கா்ணன்
மெத்தபகையுடையான்

லெகுவாக உங்களையும் யின்றுவிடமாட்டான்
 நிமிஷம் அசராமல்
யாவரும்போர் செய்யுமென்று கிருஷ்ணனுரைத்து
 நல்லதர்மர்பாதமதில்
தேவாதி தேவனுடன் அர்ஜுனன்பணிந்து
 திடமாய் விடைவாங்கி
விஜயன் பராக்கிரமன் வச்சிரகவசம் புனைந்து
 வீரரெல்லாந்தான்கலங்க
கெஜேந்திரவரதன் கொடுத்த தேவகிரீடத்தை
 கெம்பீரமாய்த்தரித்து
விற்சாடுகற்சாடு முதுவிலம்புருத்தூணி
 விஜயனும்தானணிந்து
பாரிசாதங்களொடுபங்கயநீலோர்ப்பலமும்
 பரிமள மாலைபுனைந்து
திருநீருதானணிந்து வீரசெந்தூரப்பொட்டு
 ஜெயம் ஜெயமென்றேயணிந்து
கருணையானந்தசிவ சோதிபரமசிவனை
 கருத்துருகியேதுதித்து
நூற்றெட்டு சொர்ணமணி வீரமணிபூண்கட்டும்
 நொடிக்குள்புவனமெல்லாம்
வெற்றிபெரும் பேர்படைத்த விஜயகாண்டீபத்தை
 விண்ணோர்கள் கொண்டாட
ருத்திராம்சத்துடனே கைதனிலெடுத்து
 நெடுமாலும் அர்ஜுனனும்
சித்திரத்தேர் மீதேரி சபதம்முடிக்க
 சிங்காரமாயிருந்து
இரணபூமி முதலாக பூமிகள் கலங்க
 ராயபேரிகைமுழக்கி
கனமானயுத்தமது செய்யுங்களென்று
 கர்த்தன் விடைகொடுத்து
சுவேதவாம்புரவிகளை தார்க்கோலாலடித்து
 சுவாமிரதம் விட்டிடவே

தவராத்தேர்பக்கமதில் சக்கரரெட்சகரிருவர்
தணல்போல் தொடர்ந்துவர
சிறந்ததேர்மீதிருந்து செப்புவான் விஜயன்
திரிபுவனமின்று தினம்
அடியோடழியுமென்று பிர்மஇந்திராதி
அண்டரொடுகந்திருவர்
துடித்துமயங்கும்படியாய் ஒருமுகச்சங்கோடு
சுரிமுகம்வலம்புரியாம்
சங்கிடம்பூரிச்சங்கும் தவளச்சங்குடனே
தப்பட்டைபேரிகையும்
மங்களம் பம்பைமுரசு மத்தளத்தொடு பதினெண்
வாத்தியமெங்கும் முழங்க
ஆலவட்டந்தாலவட்டம் அரசிலைவட்டமுதலாய்
அசைந்தாடத்தோரணங்கள்
கோவக்கொடிவிருது படபடவென்றாட
குடைநிழல்வாழ்மன்னவர்கள்
தேரேறி வில்லுடனே பதினெட்டாயுதமும்
தீவிரமாய்பிடித்து
தேர்போகிற வேகமதால் செந்தூலெழும்பி
தினகரனைப்போய்மறைக்க
பாரெல்லாம் நடுநடுங்க யுத்தத்தில் நின்ற
படைகள் நிலைகுலைய
மகாவேகமாய்ரதமும் வரும்போதுகிருஷ்ணன்
மணிவண்ணன்பாஞ்சசன்யம்
புகழ்தேவதத்தமெனும் சங்கத்தை விஜயன்
பிரபலமாய்த்தானெடுத்து
சங்கம்பூரித்திடவே யிருவரும்தொனித்த
சங்கோசையினாலே
அங்கர்கோன் கர்ணனொடு பூதலம் வானுலகம்
அண்டம் கிடுகலங்க
யுத்தகளவீரரெல்லாம் செத்தபிணம்போல்
ஒடுங்கியசையாதிருக்க

சித்திரமாய் தேர்நடத்தி போர்க்களம்வந்திருந்து
சிலைவிஜயன் கூறலுற்றான்
போர்செய்யவருபவர்கள் வாருங்களென்று
போர்க்களத்தில் சுற்றிநின்றான்
தினகரன் மைந்தனவன் எப்போவருவானென்று
சிலைவிஜயன் பார்த்திருந்தான்
திசைமன்னர் தான்பணியும் வணங்காமுடிபொருத்த
திரியோதனராஜன்
விசைகொண்டமாருதம்போல் கோபித்தெழுந்து
விளம்புவானேர்வசனம்
என்னுயிருக்குயிரான அண்ணாவேயின்று
எனக்கெதிரிபாண்டவர்கள்
தன்னுயிரை வாங்கிவிட்டால் பூமண்டலமெல்லாம்
தானாள்வோம் தப்பாது
சேனாபதியரசே என்று திரியோதனன்
செப்பிநின்றான் முன்பாக
அப்போதுகர்ணனுமே பிதாவான சூரியனை
அடிபணிந்துஸ்தோத்தரித்து
முப்பத்திரண்டுதர்மம் தரம்போல்கொடுத்து
முடிவேந்தர் சூழ்ந்துவர
வணங்காமுடியனொடு தேரேறிகளத்தில்
வந்துநின்றான்கர்ணனுமே
இணக்கமாய்கர்ணனுமே யுத்தகளம் வந்த
தெப்படியிருந்ததென்றால்
சிரத்தணி கிரீடமது பிரகாசமெட்டுத்
திக்குமொளிவீசிடவே
இருகாதிலுமணிந்த குண்டலஞ் சூரியன்போல்
இரண்டுபக்கமுஞ் ஜொலிக்க
கடககங்கணமிலங்க தோள்வாகுமாலை
கரற்சாடு விற்சாடு
அடர்ந்து நவரெத்தின ஆரம் மகரகண்டியணிந்து
அதிவீரகண்டாமணி

காலிமேலேதானணிந்து நெற்றியில்விபூதி
காணச் சவ்வாது பொட்டு
வேலாயுதக்கரத்தான் செந்தூரமணிந்து
விளங்கினான் சூரியன்போல்
அகோரருத்திர மூர்த்தியைப்போல் கர்ணனுமிருந்து
அருகிருக்கும் தம்பியரை
வானோர்கள் கொண்டாடும் வணங்காமுடிவேந்தே
வழுத்துவேன்நீகேளும்
தனஞ்செயனுக்கே மாயன் தேர்செலுத்துவதால்
தனஞ்செயனை வெல்லுகிறான்
என்று ஒருயோசனைபாய் புத்திமிரண்டு
ஏங்கிபெரும் மூர்ச்சையதாய்
கன்றிச்சுயோதனனை பார்த்தரசர்மகிழ
காவலனுமேயுரைப்பான்
மனமகிழ்ந்துஐவரையும் அவர்கள் படைமுழுதும்
மண்ணில்மடியத்தாக்கி
அனலாய்யெரித்திடுவேன் ஒன்று செய்வாய் நீயும்
அர்ஜுனன் தேர்ச்சாரதியாய்
கடடநாடகசூஸ்திரன் காயாம்புமேனி
கண்ணன் இருப்பதினால்
அபாரமாய்ப்போர்செய்கிறான் அச்சாரதிபோல்
அழகியதேரோட்டுதற்கு
மாயவனுக்கொப்பான சல்லியமகாராஜன்
மதியூகன் எந்தனுக்கு
நாயகமே சாரதியாய் வந்தாலின்றைக்கே
நான்ஐவரைச் ஜெயித்து
பஞ்சாச்சதகோடி பூமண்டலமெல்லாம்
பாராளஉந்தனுக்கு
அஞ்சாமணிமகுடஞ் சூட்டுகிறேனென்று
அறைந்தான் கர்ணனுமே
கர்ணன்சொல்வார்த்தைதனை கேட்டுமிகமகிழ்ந்து
காந்தாரி யீன்றசுதன்

உண்மையாயோர்நொடியில் வந்துசல்லியனுடனே
உறைப்பான் வனக்கமதாய்
சல்லியராஜேந்திரனே கார்மேகமேனிச்
சாரங்கபாணியவன்
வல்லமையாயென்னெதிரி அர்ஜுனன்றனக்கு
வளமாய்த்தேரோட்டுகிறான்
அதினாலே ஐவருக்கு ஜெயமாகிறது
ஆகையினாலேநீரும்
மதியால்ரதம்நடத்தும் சாரதித்தொழிலில்
மாயனுக்கொப்பானவர்நீர்
சேனாபதியாவ கர்ணராஜனுக்கு
செய்தால் சாரத்யமது
தானேயின்றைப்போரில் ஐவரைச்செயித்து
நாடாள்வேன் தப்பாது
என்சொல்தவறாமல் நடத்தவேணுமென்று
இருகையுந்தான்பிடித்து
மன்னவனுந்தானுரைக்க மகாகோபத்தோடு
வசனிப்பான் சல்லியனே
மதிகுலத்துராஜாவே வடிவேல்தாங்கியமன்னா
வணங்காமுடியோனே
அதிவிரைவாயோடிவந்து தகாதமொழிசொன்னீர்
அரசேநீர் சொன்னதுபோல்
இன்னொருவர் சொன்னாக்கால் அவர்களுடநாவை
இருதுண்டாய் வெட்டிடுவேன்
மன்னவன்நீயானதினால் மன்னித்தேனென்று
வசனிப்பானப்போது
அரசர்முதல் யாவருக்கும் சாரத்யஞ்செய்யும்
அவன்வளர்ப்பு பிள்ளைகர்ணன்
துரையாயவனிருக்க நான்சாரதியானால்
தொல்லுலகோர்க்கேர்க்குமதோ
பதினாலுலோகமொடு சராசரங்கள் தேவர்
படைக்குமயனோடு அரன்

மதியிரவியெல்லாமும் தானனமாலுக்கு
மனிதன்யாமெனொப்பாமோ
என்று அனல்போல்கோதித்து விளம்பவேதுரீயன்
ஏங்கிமுகம்வாடிமனம்
கன்றியேசல்லியனை புல்லியணைத்து
காசினியெல்லாமதிக்கும்
ஆண்மீக்கயையுடைய சல்லியபூபதியே
அரசருக்கும் தேவருக்கும்
தானேதேரோட்டுகின்ற சாதித்தொழிலே
தான்பெரியதாகமுன்னோர்
சொன்னதுவும் பொய்யாமோ பிரமன்சங்கரர்க்கு
ஆக்ஷத்தேரோட்டலையோ
இந்நாள்கடவுளென்று சொல்கின்ற கிருஷ்ணன்
இந்தப்படைமுகத்தில்
சாரத்யம் செய்யலையோ ஆனதால் நீரும்
சம்மதியுமென்றுசொல்வி
வீர அரவக்கொடியோன் இருகரமும்பிடித்து
வேண்டினனப்போது
மருவார்த்தை சொல்வதற்கு மனமும்வராமல்
மன்னவனே யுன்மனம்போல்
வருகிறேன் சாரதியாய் கர்ணன் தேர்க்கென்று
வசனித்தான் சல்லியனே
சம்மதித்துச்சல்லியனும் சாரதிக்கோலத்தோடு
சரேலென்று தானெழுந்து
இம்மானிலந்துதிக்க கர்ணன் தேரேறி
இருந்தான்போர்சல்லியனும்
வணங்காமுடிவேந்தன் கண்டின்று போர்ஜெயித்து
வாழ்வோமென நினைத்தான்
மனங்கமழுமாலையணி அரசரெல்லாங்கண்டு
மனமகிழ்ந்து ஆர்த்தனரே
கர்ணனோடு சல்லியனும் கலந்துஉரவாடி
கவலைவிட்டுராஜரெல்லாம்

பிர்மித்து கண்கலங்க குதிரைக்கயர்பிடித்து
பெருமிதத்தேரோட்டினனே
குருக்ஷேத்திர பூமியிலே போர்வீரர் வாள்வீரர்
கூடியேநிற்பதுவை
தர்மருடசேனையதை யூகம் வகுத்து
தானின்றான் தூய்மனுமே
பாஞ்சாலராஜனொடு சோமகேயன்போஷ
படைவீரரெல்லோரும்
வாஞ்சையாய்கர்ணனிற்கும் யுத்தமுனைக்களத்தில்
வரிசையொடுவந்து நின்றார்
அரவக்கொடியோன்றன் சேனைகள் நிற்பதுவை
அறிந்துமே கோபாலன்
பார்த்தாயா அர்ஜுனனே என்றுதானெங்கள்
பார்வண்ணன் தான்காட்ட
நேர்த்தியாய்த்தான்பார்த்து நீலமேகவண்ணா
நெடுமாலேஉன்னருளால்
இன்றைக்கே கர்ணனையும் போர்க்களந்தன்னில்
இரவிமனந்தான்கலங்க
கொன்றிடுவேன் தப்பாது மாயாவுதாரு
கோபாலாவென்றுரைத்து
அழியாத்தேரதனை அழியுந்தேரேறிவந்த
அங்கதேசாதிபன்முன்
பழிவாங்கவேமாயன் தேரதனை நிறுத்த
பற்குணனுமேயெதிர்த்தான்
கதிரோன்மகன் பார்த்து சல்லியனே நானோர்
கணப்பொழுதிலேயிவனை
பதியோர்கள் தானறிய பற்குணன்தலையை
பாம்பாலறுக்கிறேன்
விடுதேரையென்றிடவே சல்லியனும் கோபித்து
விளம்புவானோர்வசனம்
அடுத்தோர்க்கு வேணநிதி தருங்கொடையாளா
அங்கதேசாதிபனே

அர்ஜுனனிடத்திலே நேராகநின்று
 அநேகந்தடவையிலே
பெரும்போர் நீ செய்தாயே என்றைக்கிச் செயித்தாய்
 புண்ணியனே உன்வழக்கம்
அவனோடு போர்புரிந்து ஓடினதேயொழிய
 அவனை யெப்போ நீ ஜெயித்தாய்
சிவனோடு மல்யுத்தம் செய்ததறியாயோ
 செவ்வேள் கரத்தானே
உன்னையவனின்று தினம் தப்பாமல்கொள்வான்
 உஜாராக நீயிருப்பாய்
ஊணுவென உரைக்க கர்ணன் கண்சிவந்து
 மதியில்லாச்சல்லியனே
பரசுராமர்தனக்கு கோபம்வரவே
 பரலோகத்தண்டரெல்லாம்
திரமானகுருசெய்ய எனக்குச்சாபந்தான்
 தீவிரமதாய்க்கொடுத்தான்
சாபத்தாலர்ச்சுனனும் ஜெயித்தானல்லாவிட்டால்
 க்ஷணத்திலவனை வதைத்து
ஆபத்தடைந்திருக்கும் அரவக்கொடியோனுக்கு
 அவனியெல்லாந்தான் கொடுப்பேன்
மறுபேச்சுரையாமல் ரதத்தைநடத்தென்று
 மாகோபமாயுரைக்க
உருமியனல்போற்சினந்து தேர்சாரதிமகனே
 உனக்காதேர் நானோட்ட
என்றுமந்திரவாளுருவி கர்ணனின் தலையை
 இதோ அருக்கிறேனெனவே
சொன்னதையறிந்து அந்தச் சூரியகுமாரன்
 ஜோதி வடிவாளுருவி
இரதத்தைவிட்டுக்கீள்குதித்து யிருவரும்பின்வாங்கி
 இராசவரிசைப்படியே
மதயானைபோலிறைந்து வாள்யுத்தஞ்செய்ய
 வணங்கா முடியோனும்

மோசமதுவந்ததென்று திடுதிடென்றோடி
முகஸ்துதியாய்ச் சேதிசொல்லி
வாசமலர்மாலையணி சல்லியனேகர்ணனே
மதிமிகுந்த வல்லவனே
என்தலையை வெட்டிவிடும் துன்பமில்லை யென்று
இயம்பிநின்றான் மத்தியிலே
அன்பாயிருவர்களும் சமாதானமாகி
அசசேமயங்காதே
இன்றுபகலுக்குள்ளாக ஐவரை ஜெயித்து
இரவிமதி சூழுலகை
உன்கையிலே தந்திடுவேன் அஞ்சாதேயென்று
உரைத்தே அனுப்பிவிட்டு
வித்தை சொன்ன சற்குருவாம் பரசுராமர்பாதம்
விழுந்தே நமஷ்கரித்து
பெற்றதகப்பன்போலே தேகமலங்கரித்து
பிரசண்டவில்லெடுத்து
வடவாமுகாக்கினிபோல் கோபித்துசங்கம்
வாயில்வைத்து தான்முழக்கி
படபடெனவே கொடிகள் ஆடிடவாத்தியங்கள்
பதினெட்டுமேமுழங்க
தேரோடு யானைபரி காலாள்களெல்லாம்
திரமாயணிவகுத்து
பாரினிலெதிர்த்தவரை பஞ்சாயெரிப்பனென்று
படைமுகத்தில் முன்னேநின்றான்
துரியோதனனுடைய சேனாபதிகருணன்
துடியாகநிற்கிறதை
அறிவுடைய பாண்டவர்கள் சேனாபதியாய்
அமைந்த திட்டதுய்மனுமே
கண்டுகோபித்தெழுந்து தனது படையோடு
கர்ணனிடம் வந்தெதிர்த்தான்
சண்டமாருதம்போலே இரண்டு சேனாபதியும்
சங்கத்தொனிகள்செய்து

இருபேரும் வில்லெடுத்து வளைத்து நாணேற்றி
இடியாஸ்திரங்களோடு
பெருஞ்சத்தமேகமது மாரிபொழிந்ததுபோல்
பிறையம்புகளனந்தம்
ஒருமுகூர்த்தநேரம்வரை பாணந்தொடுத்து
ஓயாதசண்டையினால்
கர்ணன் மிகச்சினந்துபிறை முகக்கணையால்
கைவில் கொடியைவெட்டி
சரங்கள் அளவில்லாமல் மாரிபோல்விட்டு
சரிபோர் புரிந்திடவே
இருவீரர் விட்டகணை பட்டுருவி அங்கே
எலும்புமுதல் கால்கையுடல்
அறுந்து தலை மூளைசிந்த மாண்டபேர் தன்னை
அளவிடவுமெண்படுமோ
ஜெனமேஜெயராஜாவே இன்றுபோர்திறத்தை
செப்புதற்குச் சண்டைசெய்து
கணமாகவெற்றிபெற்றார் இன்னாரின்னாரென்று
கண்டுசொல்லநாவுமுண்டோ
அதிரதரும் சமரதரும் மகாரதர் அர்த்தரதர்
ஆனதொரு நால்வீரர்
அதிவேகமாய்நடத்தும் தேர்யானை குதிரை
அழிந்தது கணக்கிலையே
ஈரெட்டுநாள்வரையும் போரில் தப்பித்து
இருந்தபெருஞ்சேனையெல்லாம்
வேறுவேறாகியுடல் விழுந்து சிதைந்திடவும்
விட்டான் கணைமாரி
குந்திக்கு மூததமகன் மேரொத்த வில்வளைத்து
கொடுங்கணை சோராதெடுத்து
வந்தசூழல் காற்றதுபோல் சுழன்றுமுனைமுகத்தில்
வரிசையொடு விட்டகணை
அடிபட்டுயிரிழந்து சித்திரவதையாகி
அவனியிலே மாழுவதும்

முடிபொருத்த மன்னரொடு இருபடைவீரராலும்
முகந்திரும்பியோடினரே
சத்திவடிவேலெடுத்து திட்டதும்மன் மேல்விடவே
தன்ரதத்தில் மூர்ச்சையதாய்
புத்தியறந்தே விழுக சாரதியுங்கொண்டு
போனான் ஒருதிசையே
சேனாபதிமறைய கர்ணன்மழையெனவே
சிலீமுகங்கள்தான்விடுத்து
யானைத்தலையறுத்து துதிக்கையைவெட்டி
நாலுகால்தூளாக்கி
உடலெல்லாந்தானறுந்து அலறிவிழரத்தம்
ஓடநதியெனவே
படைகலங்க இராஜனோடு யிறந்தயானைகளோ
பாரிலனந்தந்தானே
அங்குபடி சேணமிட்டு கல்லணைபிடித்து
ஆயுதந்தோடேவீரன்
சிங்கம்போற் தானேறி ஆயுதங்களாலே
சென்றமட்டும் போர்புரிந்து
குதிரை தலைகாலறுந்து வால்குடலறுந்து
குருதிவெள்ளமாரோட
அதிசயமதாயிறந்த குதிரையையெண்ண
யாராலுமுடியாதே
ஆயுதங்கள் தன்னோடு எதிரிகளைவெட்டி
அவர்வெட்டத் தட்டிவிட்டு
மாய்கின்றகாலாட்கள் கோடானகோடி
மாகர்ணன் பாணமதால்
கண்டுதர்மராஜனுமே ஆவேஷங்கொண்டு
கண்ணாயிதென்காலம்
தண்டாயுதக்கரனே நீயாகிலுமிப்போ
தான்போகமாட்டாயா
என்றுமனஸ்தாபமொடு சொல்லவே வீமன்
இசைந்த வீரதிபரும்

ஒன்றாகவேசேர்ந்து வீமன்தேரேறி
        உண்மையுள்ள ஆச்சாரி
மைந்தனசுவத்தாமன் தன்னோடுசேர்ந்த
        மன்னர்களைத் தானெதிர்த்து
சரமாரியாய்க்கணைகள் தொடுத்தே விடுத்து
        சதுரங்கசேனைகளை
சின்னபின்னமாய்வதைத்து கண்டோர்நடுங்க
        ஜிவ்வெனவே தானெழுந்து
தாண்டிக்கதையெடுத்து கர்ணன் சேனைக்குள்
        தானுழைந்துவீமனுமே
கதாயுகத்தைக் கைப்பிடித்து வரிசைப்படிபாய்ந்து
        கரகரவென்றே சுழன்று
அதாசூரஉக்ரமொடு கதையாலடிக்க
        அழிந்தாரனேகமன்னர்
தேர்ச்சாரதிகுதிரை கொடிவில்லறுந்து
        செத்தார் வெகு கோடி
பார்புகழும் யானையின்மேல் யிந்திரனைப்போல்வந்த
        படைமன்னர்யானையொடு
கதையடியால் மூளையது சிதறியேரத்தம்
        கசிந்தாறு போலோட
பதைபரப்பரிவீரர் குதிரைமேலேறி
        பட்டாவால் வெட்டிடவே
வீமனடியாலவர்கள் சடலம் நசுங்கி
        வேகமாங்குதிரையொடு
பூமியிலே தான்விழுந்து ரத்தத்தில்மிதந்து
        போகும் பரியனந்தம்
காலாட்கலெல்லவரும் கதையடியினாலே
        கால்கையுடல்சிரசு
பாழாகிக்கீழ்விழுந்து யிரந்தபேர்கணக்கு
        பாரினிலேயாருரைப்பார்
இந்தப்படியாக துரியோதனன் சேனை
        எங்கியே மாண்டதுவே

வெந்துமனம் புண்ணுக கண்டுகர்ணராஜன்
வீமனுடன் வந்தெதிர்த்தான்
வந்தெதிர்த்த கர்ணனெடு வாய்வுசுதன் வீமன்
மகாகோபங்கொண்டெழுந்து
நொந்துவிழத் தன்கதையால் சேனைகளையடித்து
நொறுக்கிவரும்பொழுது
இரண்டுவகைச்சேனைகளும் புரண்டு எழுகடல்போல்
யிறைந்துபெருங்கோஷ்டமதாய்
திரண்டபடையின்பெருக்கம் எப்படியிருந்ததென்றல்
செப்பிடக்கேள் சபையோரே
சீதையைச்சிறையில் வைத்த ராவணனுடைய
சிறியராட்சதப்படையும்
மாதவனும் ஸ்ரீராமன் வானரவீரர்களும்
மகாகொடிய சேனைகளும்
எதிரெதிரே நின்றுகொண்டு மண்டலமெண்டிசையும்
எங்கிகலங்கிடவே
அதிர்ந்து அட்டகாசமொடு ஆர்ப்பரித்துக்கொண்டு
அதாகுதமாய் நிற்கையிலே
புஜபலபராக்கிரமம் தவமகிமைபெற்ற
புகழ்வீரன் கும்பகர்ணன்
இராவணனு மிந்திரஜித்து முதலோரை வதைத்த
இராமருட சேனைகளும்
மேலோர்கள்தானரிய ஆஞ்சநேயர் மைந்தன்
மேதினியில் ராட்சதரை
சின்னபின்னப்படுத்தி அரக்கரைக் கொன்றப்போல்
க்ஷணத்திலேஉங்களையும்
மன்னர்களே கொல்லவந்தேன் பாருங்களென்று
மதவீமன் தான்கூறி
யானைகள் தலையுடைத்து ஆனைகள்சிதறி
அலறிஉயிர் மாய்ந்திடவே
வானுலகில்தேவரெல்லாம் வேடிக்கை பார்க்க
வனுவீமன் ராஜர்களை

கதையினலேஅடித்து உதிரச்சேருக்கியவன்
கலக்கிவரும் வேளையிலே
எதிராய்கர்ணன்பார்த்து தன்னுடையவில்லில்
எடுத்து அனேகங்கணைகள்
கையோயாமற்தொடுத்து வீமன்கைபிடித்த
கதையைத்தூளாக்கிடவே
ஐயோவெனப்படைகள் அலறிக்கையாலடித்து
அவன் ரதத்தின் மேலேறி
வில்வளைத்துநாராச பாணங்கள்விட்டு
மெய்கலங்கவே அடித்தான்
மல்வீமன்தன்கதையால் கர்ணனடிபட்டு
மண்டியிட்டு வில்தனிலே
முள்ளம்புசில்லம்பு கழுகிறகுபூண்ட
மூன்றும்பிறைக்கணைகள்
உள்ளத்தில்மந்திரங்கள் ஜெபம்பூஜைசெய்து
உரசக்கொடி வேந்தன்
சேனபதிகர்ணன் பாணங்கள்வீமன்
சடலமதைப்புண்ணாக்கி
அண்டையிலேதானிருந்தத விடசேனன்பார்த்து
ஆக்ரமித்துக்கோபமதாய்
மண்டலீகராஜரொடு நாலுவகைசேனைகள்
மண்மேல் விழுந்தழிய
கணைமாரியாய்ப்பொழிந்து ஐவர்படைகள் பதறி
கலங்கி யெங்கும் தானேட
அணைவரையுங்கொன்றுலக்கி வீமசேனனைவளைத்து
அடர்ந்து போர்செய்திடவே
வீமன்மகராஜன் அனல்பொரிபறக்க
வெகுண்டுவிட சேனையும்
தாமிசமில்லாமலுமே அவனேடுவந்த
தார்வேந்தர் நாற்படையும்
அலமலந்துஓடிடவே அஷ்டதிரமேபூட்டி
அனலாய்க்கொழுத்திடவே

கண்டு இருவோர்களுமே மனதுகளிகூர்ந்து
கடுங்கோபமேபெருகி
இருதோள்பூரித்தவர்கள் இரதத்தைமுடுக்கி
இடம்வலமாகச்சுழன்று
வருகின்றவேகமதால் எழுந்ததூளிகளும்
வானுலகையே மறைக்க
உலகம் அழிந்ததென்று தேவர்கள்நினைக்க
உரத்திருவோர் வில்வளைத்து
ஜலதாரையாய்மேகம் வருசித்தாப்போலே
சரம் விட்டடித்திடவே
பொன்மலையைவில்லாக்கிப் புரமெரித்தஈசன்
பொருந்தும் வலக்கண் சூர்யன்
தன்மகனுங்கர்ணனவன் வாய்வுமகன்வீமன்
தன்தேகமாதினையும்
துளைத்தூடுருவிடவே பாணமழைபொழிந்து
துயரமிகச்செய்திடவே
களைக்காமல்வேனசரம் தொடுத்தும்நிற்கமாட்டாமல்
கண்கலங்கித்தேவாஷ்ரம்
தொடுத்தேகர்ணனுட தேகம்ரத்தமோட
துன்பமதுசெய்து பின்னே
கடுகடுத்துசாரதியாம் சல்லியனையேசி
காற்றின்மகன் போகிடவே
மானபரவீமன் மயங்கினான்சாரதியும்
மப்பாக கொண்டு சென்றான்
வீமன் அடிபட்டசெய்தி நகுலசகாதேவர்
வேகமாய்கேட்டுவந்து
காமனெனவில்லெடுத்து வளைத்துநாணேற்றி
கணைகளனேகந்தொடுத்து
கர்ணன்கைவில்லறுத்து சல்லியன்மெய்பதர
கணைதொடுத்து போர்புரிய
வர்மமதுவைக்காமல் தாயாருரைத்த
வாக்குபிசகாமல்

கொடும்போர்புரியாமல் தம்பிமாரென்ற
குறிப்பை மனதில்வைத்து
படுகளத்திலேயிவரை பலகணைகளேவி
பரிதேர்கொடியறுத்து
நகுலசகாதேவர்களை உயிர்வதைசெய்யாமல்
நலமாகஓட்டிடவே
வீரரிளைத்தாரெனவே சாத்தகிவெகுண்டு
வீரியமாய்த்தேர்நடத்தி
காமனை எரித்ததுபோல் கர்ணன்மற்றோரை
கணலாயெரித்திடவே
விடசேனன்கோபமுற்று சாத்தகியாள்வார்மேல்
வேணகணைவிட்டடிக்க
படமடெனத்தேரொடிந்து சாரதிவில்லழிந்து
மயங்கியப்பாற்போயிடவே
பலதேசராஜாக்கள் ஒன்றாகக்கூடியங்கே
பகைத்து தர்மர்சேனைதனை
உலைவாய்மெழுகெனவே உருகிட அடித்து
உரத்தசண்டை செய்திருக்க
வெகுதூரத்தேயிருந்த தர்மராஜன்தெரிந்து
வேகமாயோடிவந்து
இந்தப்பெரும்போரில் கர்ணன்கணையால்
இறந்தோர்போக மீதிநின்ற
சொந்தப்பாஞ்சாலரோடு பரராஜர்சூழநின்று
சுருக்காகத்தேரேறி
வாசமலர்மாலையணி தருமராஜேந்திரன்
வந்தே மரித்திடவே
நேசமாய்தர்மரோடு வந்தபெருஞ்சேனையும்
நிலத்தரசன் சேனைகளும்
அணலாஸ்திரம்வருணாஸ்திரம் பிறைவாழியோடு
அனேகஞ்சரந்தொடுத்து
மனவேகமாய்ரதத்தை சக்கரமாய்ச்சுலற்றி
மாரியென அம்பு விட்டார்

தர்மன்விடுத்தகணை யெல்லாம்மறுந்து
        தனித்தைம்பதுகணையால்
முரசக்கொடியறுந்து கைவில்லைவெட்ட
        முகுந்தன் தனைநினைந்து
கடுங்கோபத்தால்கெதையை கையால்சுலற்றி
        கர்ணன்மேல்விட்டெறிய
முடுக்காய்வரும்கெதையை கர்ணன்கணையால்
        மோதியடித்தேயுடைத்து
கைகலந்த வென்போரால் சேனைகள் வெட்டுண்டு
        கடலில் ரத்தம் போய்ப்பாய
ஐயோ அபயமென்று பாண்டவப்படைகள்
        அலறியெங்கும் ஓடிடவே
வடவாமுகாக்கினிபோல் தருமர் வில்தனிலே
        மகிமையுள்ள வெஞ்சரங்கள்
சடசடவென்றே தொடுத்து சுயோதனன் படைகள்
        தான்மடிய விட்டனரே
கர்ணன் வெஞ்சாயகத்தால் தருமருடசேனை
        கதரியுடல் துண்டு துண்டாய்
அருந்துவிழ மற்றோர்கள் திசாதிசைகளெங்கும்
        அழறிவிழுந்தோடினரே
இந்தப்படியாகவேதான் தருமரோடு கர்ணன்
        இரணிய நரசிங்கமென
இந்திரனும் தேவர்களும் ஆச்சரியப்படவே
        எதிர்த்து யுத்தஞ் செய்கையிலே
பூமண்டலமுழுதும் ஆளயிருக்கின்ற அந்த
        புண்ணியவான் தர்மரின்மேல்
நேமமாயேழுகணை தொடுத்துப்புயமீது
        நேராக விட்டிடவே
பதிலாக ஏழுகணை தருமர் விடுத்து
        பகலவன் மைந்தன்கொடியும்
சதிருடைய வில்லதுவும் துண்டாய் விழவெட்டி
        க்ஷணத்திலவர் தள்ளிடவே

அங்கதேசாதிபதி மருவில்லெடுத்து
அதில் நூறுநற்கணைகள்
வெங்கோபத்தால் விடவே இருவருடசேனை
வெந்தணலாய் மாண்டிடவே
ஆணுவத்தாலிருவர்களும் வீராவேஷங்கொண்டு
அடர்ந்து போர் செய்கையிலே
பாணங்கள் இருவருட தேகமதில் பட்டு
பாய்ந்து ரத்தந்தானோட
திரியோதனன் தானும் தம்பிமாரேழ்வரை
தேடியழைத்தே நீங்கள்
பருதிமகனுக்குதவி செய்வீரென்றேயனுப்ப
பார்த்தான் மதவீமன்
வீமனைக்கண்டேழ்பேரும் கோபாவேசத்தோடு
வில்விலனே கங்கணைகள்
பூமிநடுங்கத்தொடுத்து வீமனையடிக்க கொஞ்சம்
பொறுங்கள் தம்பிமாரேயென்று
அர்த்த சந்திரபாணமது ஏழெடுத்துப்பூசை
அடைவாகச் செய்துவிட
விற்பிடித்த ஏழ்பேரும் சிரசறுந்துவீழ்ந்து
விண்ணுலகம் சேர்ந்தனரே
கண்டு துரியோதனனும் கர்ணனால் தர்மன்
கலங்கி வீழ்வானெனவே
கொண்ட பெண்ணைமேமாரி வீமனுமேலேழ்வர்
கொலையுண்டழிந்தனரே
என்று வெகுவாய்ப்புலம்பி கிருதவன் மாகிருபர்
இருந்தராஜாக்களோடு
அன்ன அசுவத்தாமா சகுனி மற்றோரை எல்லாம்
அழைத்தேவி விட்டிடவே
சிற்றெறும்பு போலவுமே வீமனைச்சூழ்ந்து
செந்தணலதாய்க்கணைகள்
விட்டிடவே வீமனுக்கு விஜயன் சாத்தகியும்
வீரியசேனுபதியும்

துணையாகவே சேர்ந்து சுயோதனன் மற்றோரும்
துன்பமாய்த்தானோட
கணையினாலே துளைத்து எங்கும் பிணமாய்க்குவிய
கலக்குகின்ற வேளையிலே
முரசக்கொடியோனும் கச்சைக்கொடியோன்மேல்
மூர்க்கமதாய் ரெண்டுகணை
விரைவாகவே தொடுத்து கர்ணமகராஜனுட
வில்லை இரண்டாய் வெட்டிடவே
தினகரகுமார கர்ணன் மருவில்லெடுத்து
தீவிரமாயிரண்டுகணை
அனல்போலவே தொடுத்து சாரதிவில்பரியும்
அழித்துச்சிலகணையால்
தர்மருடதோளிரண்டும் ஊடுருவியோட
தாக்கிடவே தர்மருந்தான்
கர்ணனொடு சல்லியன்மேல் காலாக்கினிக்கணைகள்
கனவேகமாய்த்தொடுத்து
அலைகுலையத் தலைகுலைய தேகத்திருந்து
ஆறுபோல் ரத்தம்பாய
நாலுவகைச் சேனைகளும் இடியோசை கேட்ட
நாகமதுபோலொழிய
அங்கதேசாதிபதி அடங்காக்கோபத்தோடு
அனலாஸ்திரம் விடுத்து
திங்கட்குலமகிபன் தர்மருடைசேனையை
திசாதிசையிலே விரட்டி
நொறுக்கவேதருமருந்தான் தன்வில்லெடுத்து
நொடியிலனேகங்கணைகள்
சுருக்காகதான்விடுத்து கர்ணனுடவில்லை
துண்டாகவெட்டிடவே
வில்லதுவுமேஒடிய கர்ணனுக்கு கோபம்
வெகுண்டொருவேல்தானெடுத்து
வல்லபமாய்தர்மருட நெத்தியிலேயடித்தான்
வடிவேலடிபடவே

தர்மருடநெத்தியிலே இரத்தமதுவோட
தயங்கியுடலம் நொந்து
கர்ணன்முகந்தனிலே முளிக்கலாகாதென்று
கனகமணித்தேரேறி
பாசறையில் வந்திருந்து உடல்வருத்தந்தீர
பகவான் தனைநினைந்து
வேசாரியின்றுதினம் கர்ண னுயிர்வாங்கி
விமலனே வந்திடுவாய்
என்றேநி நால்வர்களும் கர்ணனிடத்தில்
இன்று அடியால் மெலிந்தோம்
தன்னிகரில்லாமுகுந்தா கர்ணனை வதைத்து
தனஞ்சயனோடே வருவாய்
செங்கண்நெடுமாலே சீதேவிநாதா எங்கள்
திருமாலேஉன்னையல்லால்
எங்களுக்குவேறுதுணை இல்லையரிராமா
என்றுபடுத்தேயிருந்தார்
தர்மரவர்வேலடியால் மயங்கிவிட்டாரென்று
தாஷ்டிகமாய்க் கர்ண னுந்தான்
பெருஞ்சேனை கும்பலொடு எதிர்த்தராஜாக்களை
பிணமாகவேயறுத்து
யானைபரிசேனைகளை அனேகதுண்டமாக
அறுத்து அனலாயெரித்து
வானோர்கள் கொண்டாட எதிர்த்தவரைக்கொன்று
வழிமறித்து நிற்கையிலே
திரியோதனனோடு தம்பிதுர்ச்சாதனன்
சிலசேனை வீரரொடு
பரிமேல்நகுலனொடு சகாதேவன் வீமன்
பாங்காகச்சண்டையிட்டார்
சகுனியொடுகாந்தாரர் இராஜாக்களோடு
சல்லியனைச்சார்ந்தோரும்
மிகுபலவான் சாத்தகியும் திட்டத்துய்மன்கூடி
மேன்மைபெறச்சண்டையிட்டார்

அசுவத்தாமாவோடு கிருதவன்மாவும்
அதிரதக்கிருபாச்சாரி
விசுவாசயாதவர்கள் போஜகுலத்தலைவர்
வீரியரொன்றாய்ச்சேர்ந்து
கர்ணன்போர் செய்திரமும் தர்மர்முதலான
காவலரிளைத்ததுவும்
கருந்துளசிமாலையணி காயாம்புவண்ணன்
கண்டுவெகு கோபமதாய்
சுவேதவாம்புரவிகளை பூட்டியதன்தேரை
தூண்டியே யானையின்மேல்
தாவிவருஞ்சிங்கமென வந்துகர்ணன் முன்னே
தானிறுத்தினர்தேரை
அழியாரதந்தனிலே அனுமக்கொடிபரக்க
அரசரெல்லாம் மெய்பதற
தெளிவாய்தனுறவேதம்தவறாதறிந்த
சிலைவிஜயன் மண்டியிட்டு
தேவதத்தமென்றதொரு சங்கத்தைபெடுத்து
திசைகலங்கஊதிடவே
பவநாசப்பெருமான் பாஞ்சசன்யசங்கம்
பகவானும் தான்முழக்க
இவர்கள்வெற்றிசங்கோசை எதிர்வந்தோர்காதில்
இடியோசைபோலடிக்க
புவனமொடுயுத்தகளம் எங்கினுநடுங்க
போர்ச்சங்கந்தான்முழக்கி
காண்டீபந்தான்வளைத்து அரன்பூட்டியதிலே
கணைதொடுத்துவிட்டிடவே
தாண்டிவந்தநாற்படையும் தலைகாலறுந்து
தாரணியிலேமடிய
துதிக்கையுங்கால்முறிந்து உடலம்முறிந்து
ஆண்டித்துயானைவிழ
கெதியைந்துங்கொண்டபரி தலையுடைந்துநைந்த
தெத்தனைபோ யாரிவார்

சாண்டீபன் தன்கணையால் திரியோதனன்சேனையை
கண்டதுண்டமாகவெட்டி
தாண்டுபரித்தேரேறி வந்தெதிர்த்து அசுவத்
தாமன்முன்னே னின்றிடவே
கண்டுஅசுவத்தாமா வில்லினில் அனேகங்
கணைகள்தனைதொடுத்து
அண்டர்களுக்கண்கூச செந்தணலாய்பாணம்
அனேகசரமாய்ப்பறந்து
சாக்கூடங்கட்டிடவே சச்சுதானந்தமாயன்
தன்னோடருச்சுனன்மேல்
வரவொட்டாமற்றடுக்க சுவேதவாம்புரவி
வளைந்துபடைசுற்றிவர
நரன்வெகுவாயஸ்திரமும்அதினொடுதேவாஸ்திரம்
நலமாகவேகலந்து
பறந்தசாக்கூடமதை வெட்டிநிர்தூளி
பண்ணியே அர்ஜுனனும்
வாய்வாம் சுழல்பாணம் ஒன்றையபிமந்திரித்து
மானதமாய் பூஜைசெய்து
சாயுங்கதிர்மறைத்தோன் மைத்துனன் விட்டான்அந்தச்
சரமானதவிரிந்து
சுழல்காற்றுபோலவந்து அசுவத்தாமாதேரை
சுத்தியேதானிழுத்து
அழவிறந்தயானைபரி சேனைமன்னர்தன்னை
அனேகதுண்டமாய்நறுக்கி
தேரொடசுவத்தாமனை அனேகதூரம் போகச்
செய்தேயருச்சுனனும்
பாராமல்முன்னிருந்த கிருபகச்சாரியாரை
படையோடு தேர்கொடியும்
அவர்முன்னே ஆலவட்டம் குடைபிடித்தோரோடு
அதமாய் திசாதிசையில்
தவறினபேரோடிடவே வெட்டித்தூரத்தி
தனக்கெதிரியில்லாமல்

இராஜசிங்கம்போலே தனஞ்சயன் வரவே
　　இரணபேரிகைமுழக்கி
போசதேசத்தலைவர் கிருதவன்மாவோடு
　　போர்செய்திடயெதிர்த்தார்
எதிர்த்தபடைவீரர்களை காண்டீபத்தனேகம்
　　யெரிக்கணைகள் தானெடுத்து
விதிமந்திரம்ஜெபித்து விட்டுஎதிர்வந்த
　　வீரர்தேர் வில்லறுத்து
கொடியொடும்சார்தியை சந்துசந்தாய்ப்பிழந்து
　　கொண்டுவரும்பொழுது
அடிபொறுக்கமாட்டாமல் கிருதபத்மாவோட
　　அடித்துவெருங்களமாக்கி
தனையெதிர்க்க காத்திருக்கும் சேனாபதிமுன்னே
　　தான்கொண்டுபோகுமென
அனைத்துயிர்க்கும் உயிரான அரிவாசுதேவன்
　　அனந்தசயனப்பெருமாள்
அர்ச்சுனன்செய்போர்தனிலே அளவற்றசேனைகள்
　　அதமாச்சுதென்றறிந்து
கர்ணனிடம்போகவென்று காயாம்புமேனி
　　கண்ணன்மனதிலெண்ணி
மைத்துனனுய்வந்தகர்ண ராஜனுக்குமுத்தி
　　மாலோன் கொடுக்கவென்று
சித்தமிகமகிழ்ந்து சுவேதவாம்புரவியை
　　திருக்கரங்களாற்றடவி
தார்க்கோலோர்கைதனிலும் கல்லனையோர்கையினிலும்
　　தாமோதரன்பிடித்து
கார்மேகமேனியனர் இரதத்திலேயிருந்து
　　காண்டீபாகேள்சேதி
கர்ணராஜன்றனக்குத் தாயார்தெரியாது
　　கண்குருடன் பெற்றமகன்
தர்ச்சமயம்போல்சேர்த்து ஊட்டினன்போஜனம்
　　தான்வளர்த்த கர்ணனிவன்

சூதாடிதோர்த்த அந்நாள் துயிலுரியும்போது
துரோபதையைத்தான்பார்த்து
மாதாபோலெண்ணுமல் சபையிலுனக்கான
மாப்பிள்ளைமார்தன்னோடு
நேசித்துவாழ்வையென்று சொன்னதைநினைத்தால்என்
நெஞ்சம் எரியுதப்பா
பூசித்தான்குருடன்மகன் அவனுக்குதவியாய்
போர்செய்தானிக்கர்ணன்
திக்குவிஜையஞ்செலுத்தி தேவகண்டமட்டும்
ஜெயம்பெற்ற அர்ச்சுனனே
ஊக்கரம்போர்பாணம்விட்டு இன்றேகர்ணன்
தன்னுயிரைவாங்கிடுவாய்
என்றேஅர்ச்சுனர்க்கு மால்கோபமூட்ட
இருகண் அனல்ஜொலிக்க
கன்றுல்விளாவுதீர்த்த கார்மேகவண்ணு
கடவுளேநீர்கேளாய்
சாரதிவளர்த்தபிள்ளை கர்ணனுக்குதவியாய்
சகலதேசத்தரசர்
போராடவந்தாலும் இன்றையதினத்தில்
பூவுலகெல்லாமறிய
இரவிமகனுன இந்தகொடைக்கர்ணன்தன்னை
என்னுடைய அஸ்திரத்தால்
சரீரந்தனைதுளைத்து உயிரைவாங்கிடுவேன்
சாமிநாராயணனே
என்றிருவோரும்பேசி யிருவர்சங்குந்தொனிக்க
இரையோன்ரதம்நடத்த
அண்ணல்தொனிகேட்டு அவனியெங்கும் நடுங்க
அலைகடலும் தத்தளிக்க
முன்னின்றவீரரெல்லாம் முகங்கருகிமயங்கி
முழிகுருடர்போல்தவிக்க
சரமாரியாய்ப்பாணம் தனஞ்சயன் விட்டு
சமர்செய்யுப்பேருடல்கள்

அரம்பட்ட யிரும்பதுபோல் பொடியாகச்செய்து
அதின்மேல்ரதம் நடத்தி
கணகணவென்றேமணிகள் சப்திக்க அண்டம்
கலங்கித்தணல்பறக்க
வில்விஜையன்கோபமுற்று வடவையணர்கணைகள்
மேகம்போலேவிடுத்து
சல்லாபத்தேர்தனை வலசாரியிடசாரியாய்
தான்சுழன்றுகாலனைப்போல்
சேனபதிகர்ணன் போர்முனை முன்பாக
சிலைவிஜய்ன் வந்தனரே
வந்திடுதனஞ்சயனை சல்லியனுங்கர்ணனும்
மகாகோபமாய்ப்பார்த்து
இந்திரகுமாரனைநான் சல்லியரேயின்று
என்னுகபாசமதால்
கொல்லுவேன் தப்பாமல் ரதத்தைவிடுமென்று
கோபமாய்த்தானுரைக்க
சல்லியனும் தேர்நடத்த கோதண்டவிற்பிடித்து
தான்வந்தான்கர்ணனுமே
வடவாக்கினிபோலேஅர்ச்சுணன்கோபித்து
வந்தெதிர்த்த வீரர்களை
படபடத்தகாற்றிலடிபட்ட சருகதுபோல்
பரக்கவேதானடித்து
சூரியகுமாரனவன் சல்லியன்றன்னுடனே
சொகுசாகவிற்பிடித்து
வீரியமாய்நிற்பதுவை பார்த்தே அர்ச்சுணன்
மேதினியிற்கர்ணனுமே
விண்ணோர்திசயிக்க யாவரையுமடித்து
விஜயன் உலாவிடவே
தன்சேனைமன்னரெல்லாம் யிளைத்து அழிந்த
சங்கடமெல்லாம்பார்த்து
வன்மமாயர்ச்சுணனை எதிர்த்துயிருவோரும்
மலைந்தாரெதிர்புகுந்தார்

இருவருங்கோபத்தோடு வில்லினையெடுத்தார்
இருவருமேநாணிழுத்தார்
இருவரும்டீங்காரம்தெரித்தார் இருவர்சங்குமுழங்கினார்கள்
இருவருமெத்தச்சினந்தார்
இருவருமீசைதுடித்தார் புருவமுநெரித்தார்
ஏற்றசரங்களைஎடுத்தார்
மருவில்லாபூஜைவிதி இருவருமுடித்தார்
மந்திரங்களுச்சரித்தார்
இருவருங்கணைதொடுத்தார் இருவரும்புகழ்ந்தார்
இருவரும் அகமகிழ்ந்தார்
பெரும்புவன சராசரங்கள் அசைந்துநடுங்கிடவே
பெருங்கணை அனேகம்விட்டார்
அர்ச்சுனன்கைபோயாமல் அனற்கணை ஜலக்கணை
அந்திரதேவாஸ்திரங்கள்
தற்சுரூபமாய்விட்டதெல்லாம் அங்கர்கோன்கர்ணன்
தான்வெட்டிகோபமுற்று
சதுர்முகப்பகழியொடு சரோருகப்பகழி
சந்திரசூரியக்கணைகள்
அதிகமழைபெய்ந்ததுபோல் கர்ணன்விட்டகணையால்
அண்டபுவனங்களெல்லாம்
அலற அனேகம்வீரர்எமலோகம்போக
ஆழ்கடலோடேமலைகள்
குலகிரிகளுந்தூளாய் போம்படியாய்த்தாக்கி
கொடும்போர்புரிந்திடவே
ஒருவர்பேரில் ஒருவர்ஆயிரமாயிரங்கணைகள்
ஒருக்ஷணத்திற்குள்ளாக
பெருங்கணைகோடாகோடி தொடுத்தொருவரையொருவர்
பிணமாக்கவேணுமென்று
அடிக்குங்குரோதமதை அரசரொடு தேவர்கண்டு
ஆச்சரியப்பட்டவர்கள்
அடித்துவாணசூரன் கஞ்சன்இராவணனிவர்கள்
கோராயுத்தம் புரியும்

வல்லோரெனமதிக்க போர்செய்யும்போது
மாயாஸ்திரமெடுத்து
சொல்லரியமந்திரங்கள் ஜெபித்துவிடவே
சூராிருவேர்களுட
தேகந்தனில்புகுந்து துளைத்திடவேஉதிரம்
திரண்டுநதிபோலோட
வாகானசாரதிகள் மனந்திகைத்துவாட
மயங்கிகர்ணன் அர்ஜுனனும்
கைசலித்துநின்றிடவே உந்திக்கமலத்தில்
காசினியீரேழும்வைத்த
ஐயன்மாயாகிருஷ்ணன் அர்ச்சுனனைப்பார்த்து
அறைவாரொருவசனம்
போர்திரவியாக்கிரம பராக்கிரமஅர்ச்சுனா
போர்முனைந்து நேர்நடந்து
ஆருமெதிரில்லாத நீமயங்கிவில்லில்
அணர்க்கணைவிடாமலுமே
இளைத்துநின்றகாரணமேன் எனக்குறைப்பாயென்று
எம்பெருமான்தான்கேட்க
களத்திலிருந்தகர்ணன்முன்னே காட்டிக்கொடுத்து
கைசோய்ந்து நிற்பதுவும்
எந்தன்விதிவசமோ காண்டீபக்கையனே
என்னுவுன்சாமார்த்தியம்
நொந்தசிதென்னமைத்துனனே எனக்குறைப்பாயென்று
நெடுமாலுரைத்திடவே
அநுமக்கொடியுடைய அர்ச்சுனன் கண்ணீர்பெருக
அவன்கையிரண்டையுமே
தனதுச்சிமேலேவைத்து பணிந்தைவரைக்காத்த
தாமோதரப்பொருளே
என்னோடுபோர்புரியும்கர்ணமகாராஜன்
எங்களுக்குமுன்பிறந்த
தர்மரைப்போல் தோன்றுவதால் என்மனம்வேருகி
தணல்கணையேவாமல்நின்றேன்

கொல்லுவேனென்றுவந்தகோபஞ்சிதறி
கொடுங்கணைவிடாதிருந்தேன்
வல்லபஞ்சேர் தைரியங்கள் யெல்லாந்தளர்ந்து
வாய்வரண்டு நாவுலர்ந்து
காண்டீபவில்லதனை கைதளரவிட்டேன்
கண்சொருகிபேச்சுமற்றே
மாண்டவர்கள்போலவுமே அர்ச்சுணராஜன்
மயங்கினான்மறுபடியும்
கோவர்த்தனகிரியை குடையாய்ப்பிடித்த
கோவிந்தசாமிகண்டு
தாவியே அர்ச்சுனனை மார்போடணைத்து
தனஞ்ஜெயன் மயக்கமதை
மாத்தியே அர்ச்சுணனே கர்ணனைக்கண்டு
மனதில்பயமிகுந்து
நாற்றிசைபோர்தானறிய நாகபாசக்கணையால்
நடுங்கிஉயிர்போகுமென்று
பயந்தாயோமைத்துணனே என்னசேதியென்று
பகவானுங்கேட்டிடவே
ஜெயங்கொண்ட அர்ச்சுணனும் தாமோதரனே
சிவனோடுதேவர்களும்
கர்ணராஜன் தனக்கு துணையாகநாகக்
கணையோடெதிர்த்தாலும்
ஒருநிமிஷநேரமதில் கர்ணன்முதலானோரை
உத்தமனேகொன்றிடுவேன்
சூரியனைப்போலொளியாய் தர்மராஜன்போலே
தோன்றியிருப்பதினால்
என்னுடல்துடித்துகண்கள் இரண்டுபக்கம்நீர்பெருக
எனதுமலர்மாலையெல்லாம்
அன்றிப்புலால்நாற்றம் வீசுதுகாண்டீபம்
கனமாய் வளையவில்லை
பாணங்கள்விட்டதெல்லாம் பட்டுமுனைமழுங்கி
பாரிலேவீழ்கிறது

நானுமேதொய்கிறது நானென்னசெய்வேன்
நாரணனே என்றுரைக்க
கேட்டுநந்தகோபாலன் அழியாததேரை
கேசவனார் தான்திருப்பி
தடதடபடபடமடமடவென்று கிடுகிடெனமுடுக்கி
தங்களுடபேரணியில்
விடநாகம்போல்புகுந்து தருமனைத்தேடி
விரைவாய்வரும்போது
நகுலன்சகாதேவன் இருவர்கர்ணன்கணையால்
நாணம்விட்டு ஓடிவந்து
வெகுவாகஅர்ச்சுனர்க்கும் விமலனிடமும்தங்கள்
விர்த்தாந்தமேயுரைக்க
கேட்டுத்தனஞ்செயனும் நானிருக்கத்தர்மர்
கிலேசப்படுவானேன்
தமயனார்வீமனோடு நகுலசகாதேவர்
தராபதிகள் யாவர்களும்
சமயம்க்ஷணநேரம் கர்ணனோடுயுத்தம்
ஜாக்ரதையாய் செய்திடுங்கள்
வருகிறேனென்றுரைத்து துவாரகாபுரி
வாசனொடு அர்ச்சுனனும்
திரும்பியேபாசறையில் தர்மராஜன் தன்னை
தீவிரமாய்ப்பார்த்திடவே
தர்மன்சந்தோஷமதாய் கர்ணனைக்கொன்றாயா
தம்பிநீ அர்ச்சுனனே
திருமால்கிருபையினால் சத்ருதியனை வென்றாய்
தேசமெல்லாம்உன்னதென்றார்
அப்போதுநாரணனார் தர்மரேகேளும்
அங்கதேசாதிபதி
தப்பாமல் விட்டடித்த அம்பாலேயிந்த
தனஞ்சயனுமேமயங்கி
உம்மைப்பார்த்துபோகவென்று வந்தோமிப்பொழுது
ஒன்றுங்குறைவுமில்லை

சமயம்ஒருக்ஷணத்தில் கர்ணனைக்கொன்று
ஜல்தியிதோ வாரமென்றார்
ஆலகாலவிஷம்போல் தர்மருக்குகோபம்
அதிகரித்து அர்ச்சுனனே
காலகேயநிவாத கவசர்களைக்கொன்று
கடவுளொடு போர்புரிந்து
இந்திரனுக்கரசாட்சி கொடுத்துவந்தவீரம்
இவ்வளவு தானுநீ
விந்தையாய் போர்புரிந்து கர்ணனைக்கொல்லாமல்
விஜையாயேனிங்குவந்தாய்
காண்டீபம் உந்தனுக்கேன் கண்ணன் சாரதியேன்
கசடரைப்போல் நீபயந்தாய்
தாண்டுமழியாப்புரவி தேருனக்கேன்வீரம்
தாஷ்டீகமில்லாதவனே
அப்பாலேபோவெனவே தர்மர்கோபிக்க
அர்ச்சுனன்கேட்டப்போது
செப்பரியலோகமெல்லாம் அணலாயெரிய
சினந்துவடவாக்கினிபோல்
கோபித்துகண்சிவந்து மீசைகள்துடிக்க
கொடியபுண்ணில்வேலதுவும்
தாபித்துப்பாய்ந்ததுபோல்சிந்தைமிகநெரந்து
தனஞ்செயனுமேதுரைப்பான்
முரசக்கொடிபடைத்து ராஜசூயயாகம்
முடித்துஉலகாண்ட அண்ணா
தரையிலெந்தன்வில்லினையும்யெனையும்யிகழ்ந்த
தாஷ்டீகர்யாரானாலும்
அக்ஷணமேஎன்கணையால் தலையறுப்பேனென்று
அடியேன்சபதமது
இச்சனமேஉம்முடைய சிரசையறுத்திடுவேன்
என்றுகணைபூட்டிடவே
இவரையுங்காத்தயெங்கள் ஆதிமூலமூர்த்தி
ஐய்யனை அர்சுனனே

மெய்யாகியதகப்பன் இந்தென்றுவேதம்
விளம்புவது கேட்டிலையோ
அண்ணன்ஒருதகப்பன் தர்மர்கோபித்தால்
அதிலோர்குறையுமில்லை
பண்டுநூல்சொன்னபடி பெரியோர்பிழையைப்
பார்த்திபனேநீபொறுப்பாய்
உன்வாயினால்சிலது குறைவானபேச்சு
உறையாதேதர்மரையும்
தன்சபதம்குறையாது தனஞ்செயாவென்று
சாற்றினார்கோபாலன்
மன்னர்பனியும்தர்மர் காடுபோரேனென்று
மனதில்வருத்தமுடன்
எதிரொன்றுஞ்சொல்லாமல் சண்டையோடரசும்
எனக்குவேண்டாமெனவே
தவஞ்செய்யப்போரேனென்றுதர்மர்நடக்க
தனஞ்செயனும்நாரணனும்
புவனந்தனிலோடி தர்மருடபாதம்
போற்றியேஉரைப்பார்
குந்தியம்மாள்பெற்றெடுத்த தர்மபூபதியே
கோடிபிழைதான்சிறுவர்
விந்தையாய்செய்தாலும் பொறுப்பார்பெரியோரென்று
விளம்புதே நால்வேதம்
தாங்களறியாததுண்டோ அர்சுணன்குற்றத்தை
தான்பொறுத்தேஎங்களுக்கு
ஆங்காரமானகர்ணன் தனைக்கொள்ளஉத்திரவு
அருளினாலிப்பொழுதே
சென்றுதேவாஸ்திரத்தால் திரிபுராதிகளை
சிவனெரித்தவாறதுபோல்
இன்றுபகலுக்குள்ளாக கர்ணனைக்கொன்று
இருவர்களும்வந்திடுவோம்
ஜெயம்பெற்றுவந்திடவே வரக்கருளுமென்று
செந்திருமால்தான்வணங்க

நயமாய்மனமகிழ்ந்து போய்வாருமென்றே
    நவின்றார்தருமருமே
சொல்லிவாய்மூடுமுன்னே இருவரும்வணங்கி
    சுந்தரத்தேர்மீதேறி
நல்லசந்திரன்பகலில் உதயமானதுபோல்
    நல்லோர் வெள்ளைக்குடையை
பிடித்துவர இருபுரமும் வெஞ்சாமரைவீச
    பெரியசின்னந்தான்முழங்க
படபடெனவேகொடிகள் பலர்பிடித்துவரவே
    பரராஜர்பக்கம்நிற்க
நாலுவகைச்சேனைகளும் திட்டத்துய்மனோடு
    நல்ல தம்பிமாரும்நின்று
வேல்பிடித்துயுத்தமது செய்யும்திரமும்
    வெயிலவன்பிள்ளைமுறுக்கும்
போர்திரமெல்லாம்பார்த்து சிறுநகைகொண்டு
    புகழுவாரர்ச்சுனர்க்கே
நாற்றிசையோர்கொண்டாடக் கர்ணன் இன்றைக்கு
    நம்மனையுமேஜெயித்து
முற்றிலும்திரியோதனர்க்கு கொடுக்கநினைத்தான்
    மூர்க்கன் ஆளவேநினைத்தான்
உத்தமனே இன்றைக்குநீ கர்ணனைக்கொண்றால்
    ஒருபெலமும்நாளையில்லை
அரவக்கொடியோனை நாளைவீமன்கெதையால்
    அடித்தவனைக்கொன்றிடலாம்
திரமாகமுன்னடந்த காரணமெல்லாங்கர்ணன்
    செய்தருதல்லாது
வணங்காமுடியோனால் நடந்ததென்றென்னாதே
    வாள்விஜயாயிப்போது
இவனைத்திரியோதனன்முன் பிரட்டிப்பிரட்டி அடித்து
    இன்றைக்கே கொன்றிடுவாய்
தவஞ்செய்தபார்த்திபனே என்றுதாமோதரன்
    தருணம்போலோதிடவே

இருகண் அனல்பறக்க சிவந்துமனம்நொந்து
இப்போதே கர்ணனைநான்
ஒரு அம்பால்தேகமதை பிளந்துயிரைவாங்குகிறேன்
இறைவனேயெனப்பணிய
பிரசண்டமாருதம்போல் தேரைநடத்தி
பெருமாள்வரும்போது
எரியுந்தணல்போலே கதாயுதவீமன்
எதிரிதலைமூளைசிந்த
இரத்தவெள்ளமாயோட சத்துருசங்காரஞ்செய்து
வகிவந்துநாரணனை
தருமருடக்ஷேமமென்ன தாமோதராவென்று
தான்கேட்டானப்போது
வீமராஜேந்திரனே கர்ணனால்தர்மர்
வீரியமெல்லாமிழந்து
பூமான்தலையுடைந்து வேதனைபொறுமல்
போனார்காண்பாசறைக்கு
பார்த்துவருவோமென்று கிரீடியும்நானும்
பாங்காகப்போனதிலே
சீற்றமாய்தர்மருக்கும் அர்ச்சுனர்க்கும்நடந்த
செய்கையெல்லாஞ்செப்பினரே
வீமன்கேட்டேசினந்து வேல்வேந்தரோடு
விஜையன்பின்னால்வரவே
நேமப்பரிநகுலன் சகாதேவன்மேல்புரம்
நீள்வடக்கிச்சாத்தகியும்
உத்தமோசாஉதர்மன் இடத்தில்த்தாய்மணன்
ஒட்டிமுன்னேதானடக்க
எத்திசையுமேபடைத்த சிவபிரான்முன்னே
எதிர்த்தபுரத்தார்களின்மேல்
சம்மாரம்செய்யவந்தார் போலேகொதித்து
சாமிரதம்தானடத்த
அப்போது அர்ச்சுணனும் பச்சைமால்பாதம்
அடிபணிந்துகூறுகிறான்

திருமாலேஉன் அருளால் கர்ணனேமாய்ப்பேன்
தேவர்முதலோரறிய
விடாதத்தையென்றுரைத்து வீமராஜனப்போ
வீரியமாய்முன்னடக்க
எண்ணமெவாண்ணுச்சேனையுடன் யிருவருந்தேரேறிவந்து
எதிர்த்தார்கள் கர்ணனையே
விண்ணோர்மனமகிழ சல்லியச்சாரதியும்
வேகமாய்த்தன்ரதத்தை
அழியாரதந்தனிலே முட்டவேவிட்டு
அடித்தேகுதிரைகளை
ஒளிவானசக்கரம்போல் நாற்றிசையுஞ்சுத்தி
ஓடிவரும்வேகமதால்
செந்தூளதுகிளம்பி வானோர்கண்கப்ப
ஜெகமுழுதுந்தத்தளிக்க
இந்திரகுமாரனோடு சூரியகுமாரனும்
யெதிர்த்தார்கள்நேராக
சங்கந்தனைமுழக்கி யிருவரும்வில்லெடுத்து
சாணைவிகாட்டி
அங்கதேசாதிபன்மேல் விஜயன்விடுத்தான்
அனேகங்கணைமாரி
விஜயன்விடுத்தகணை வேகமாய்வரவே
விட்டறுத்தான்கர்ணனுமே
திசைராஜர்தான்மடிய செந்தணல்கணையை
சிலைவிஜயன் ஓயாமல்
கணைமாரியாய்ப்பொழிந்து கர்ணன்கைவில்லை
காண்டீபன்வெட்டிடவே
சினங்கொண்டுகர்ணனுமே அக்கினியாஸ்திரம்
சீறியேவிட்டிடவே
தனஞ்செயனோஸ்திரத்தால் வெட்டிஞனப்போ
தமையனென்றும் பாராமல்
அனேகந்தேவாஷ்திரங்கள் ஒன்றுமேலொன்றாய்
அம்புமழையாய்ப்பொழிந்தான்

இந்தவிதமாகவுமே இரணியனும்நரசிங்கம்
எதிர்த்துப்போர் செய்தார்போல்
சுந்தரஞ்சேர்ராமனோடு இராவணனன்றனும்
சோராதயுத்தமென
சக்கரம்போலேரதங்கள் திசாதிசைகளோடி
தானைசூழன்றுவர
பக்கத்துணையாகின்ற நால்வகைசேனை
படைகளெங்குந்தத்தளிக்க
கொடுமையாய்போர்புரிந்து குதிரைகளசந்து
குணங்கள்பலவாகி
தடுமாறிக்கர்ணனுமே வில்லதுமுறிந்து
தான்மூர்ச்சை யாகினனே
மயக்கந்தெளிந்திடவே சல்லியசாரதியும்
மறுபாரிசமொதுங்கி
தயார்செய்திருந்திடவே முன்னமேசென்ற
சதாகதிமைந்தன்வீமன்
கதாயுதத்தோடேயேகி யானைதேர்குதிரை
காலாள்களைநொறுக்கி
திவ்வியாஸ்திரங்களினல் எதிர்த்தராஜாக்கள்
தேர்வில்கொடியறுத்து
புவியில்மடிந்திடவும் புரமிட்டோடிடவும்
போர்புரிந்தான்வீமனுமே
வீமன்பாணத்தாலே வீரர்தலையுருள
வெகுபேர்மூளைசிதற
கொடிகுடைதேரும் நொறுங்க குறைத்தலைபேயாட
கோல்கால்திரேகமது
தூளாகியேபறக்க இடியோசைகேட்ட
துடியானபாம்பதுபோல்
பாழாகப்போனவரை யிவ்வளவென்றுரைக்க
படுமோசபையோரே
இந்தப்படியாக படைக்குள் நுழைந்து
எதிர்த்தோர்களைநொறுக்கி

மதவீமனும்வரவே கர்ணன்வடவாக்கினி
மகிமைக்கணை அநந்தம்
கார்காலமேகமென விட்டடிக்கும்போது
காலாக்கினிக்கணையால்
இரவாதமேருமுண்டோ இருதிரப்படைகள்
எண்ணில்லாகோடிசெத்தார்
இடும்பிகணவன்கதையால் சுயோதனன்சேனை
எங்குமழிந்தோடிடவே
வடுப்படாவீரியர்கள் இவர்களேஎன்று
மதித்தார்கள் வானோரே
தெரிந்தமட்டுங்கூறிவந்தேன் யினிநடக்கும் யுத்தம்
செப்புவேன் மாசபையில்
செங்கெருடவாகனத்தான் திருவடியில் என்மனதை
செலுத்தியேகூறுகிறேன்
புண்ணியபாவங்கள்தனை அனுபவிக்கவந்த
புதுமையுள்ளதேகமதும்
விண்டசடலந்தனிலே தத்துவந்தொண்ணூத்தாறு
விளங்கும்பராபரமாய்
நீங்காதபூரணமாய் சகலாத்மகோடிகளில்
நிறைந்தே ஆனந்தமதாய்
ஓங்காரசித்துசத்தாய் விளையாடுகின்ற
உலகளந்தநாரணனை
சங்குசக்ராதரனை முத்திருளன்கவியைச்
சபையிலுள்ளோர்தான்மகிழ
அனுக்கிரகம் செய்திடுவீர் அச்சுதானந்த
ஐயனேபஞ்சாயுதனே
அந்தசபயமதில் வீமனுடனே
அனந்தம்ராஜாக்களெல்லாம்
வந்துயுத்தம்புரிந்து ஓடினபேர்போக
மடிந்தோர்கணக்கிலையே
சிங்கம்போலாக்ரமித்து கதாயுதமெடுத்து
திடீரென்று தான்குதித்து

எங்குமேதான்சுழன்று யானைதேர்குதிரை
எதிர்த்தோருடலமெல்லம்
பஞ்சாகவேயடித்து திரியோதனன் தம்பி
பலபேரையும் வதைத்து
இரத்தம்ஆறுயோட காக்கைகழுகுபேய்
பாரிதங்குங்கூச்சலிட
உலகோர்தேவர்மதிக்க போர்செய்யும் சமயம்
உரமாய்துர்ச்சாதனனும்
கலகஞ்செய்தம்பியரும் உச்சிதவில்லெடுத்து
கணைகள்மழைபோல்விடுத்து
வானுலகம்போவதற்கு வழிதேடிவந்தாப்போல்
மாசபையில் சொல்சபதம்
தான்முடிக்ககாத்திருக்கும் வீமசேனன்மேல்
தாக்கிப்போர் செய்திடவே
கண்டந்தவீமனுமே காரிடிபோலிறைந்து
கனலாய்மனங்கொதித்து
தண்டாயுதக்கரத்தான் திசையோர்நடுங்க
தானுரைப்பானப்போது
ஓஹோதுர்ச்சாதனனே உன்னைப்போல்சூரன்
உலகந்தனிலுமுண்டோ
ஆகாமுன்னால்ராஜ சபையில்நீசெய்த
ஆண்மையுத்திப்பேச்சதற்கு
இரதகஜபதாதியொடு வந்துசெய்போரு
இரணகளத்திலுன்னைவிட
எதிரியெனக்காருமுண்டோ அம்மம்மாஉன்னை
இச்சாபோசனமாக
எமராஜன்தனக்கு விருந்திடும் நாளின்றோ
என்கையாலுன்தலையை
பூமிதனிலேஅறுத்து வடியுமிரத்தத்தை
பொசிக்கும்நாளின்றலோ
வருஷமதுபதின்மூன்றும் தண்ணீரள்ளிக்குடியாமல்
வந்ததாகந்தீர

அருந்தண்ணீரென்னுடலம் குளிரச்சாப்பிடுநாள்
அன்பாகயின்னுளோ
துருபதன்யாகாக்கினியிற் பிறந்தபாஞ்சாலி
சொல்போலே கூந்தலதை
அருமையுடனேமுடிக்கும் நாளிந்தநாளோ
ஆசைகொண்டஉன்தமையன்
தனைநாளையத்தினமே எமனுலகனுப்புகிறேன்
தம்பிநீயின்றுதினம்
எனதுசபதந்திர உனைக்கொன்றனுப்புகிறேன்
ஏகிஉனதண்ணனுக்கும்
பந்துக்கள்யாவருக்கும் நல்லயிடந்தேடி
பாங்காய்வைப்பாய்நீயும்
சந்திரகுலவம்மிசத்தை கருவருக்கவந்த
சண்டாளாபாவியென்று
குலமுறையில்லாத்தோஷி துயிலுரிந்தபாவியென்று
கோபவேஷத்தோடு
பலவாறுகப்பேச துர்ச்சாதனன்கேட்டு
பதிலுரையாதேயிருந்தான்
இளவரசனோடுவந்த தம்பிபத்துபேரும்
ஏங்கிமனந்தாழாமல்
வளைந்தவில்லைத்தானெடுத்து வருஷகாலமழைபோல்
வாளிபொழிந்தே எதிர்த்தார்
அவர்கள் தொடுத்தகணை யாவையும்நொறுக்கி
அர்த்தசந்திரபாணமது
தவறாமல்பத்தேவி பத்துபேர்தலையும்
தானறுத்து வீழ்திடவே
ஒருசமயந்தம்பியர்கள் பத்துபேர்வீமனால்
உயிரிழந்தகோபமதால்
பருவகாலமேகமென பாணந்தொடுத்தான்
பாவியாந்துர்ச்சாதனனே
சமயமதுபார்த்திருந்த வீமராஜேந்திரன்
சாமனைகப்விடவே

நிமிஷம் துர்ச்சாதனனும் வந்தகணையெல்லாம்
நீர்த்துளிபோலேயடித்து
பிரமாஸ்திரம்போன்றகணை ஏழுபிமந்திரித்து
பெலமாக விட்டிடவே
உரம்பெற்றவீமனுட தேர்ச்சாரதியும்
ஓங்கியசிங்கக்கொடியும்
பொடிப்பொடியதாகிடவே கதாயுதத்தோடே
போர்வீமனுங்குதித்து
அடித்திடத்துர்ச்சாதனன்தேர் பரிகொடிசாரதியும்
அழிந்துபொடியாகிடவே
தம்பியினிஉன்சமர்த்து என்முன்நடவாது
சபாசுவாவென்றுரைக்க
வெம்பிதுர்சாதனனும் கதாயுதமெடுத்து
வீமனோடுவந்தெதிர்த்து
வலதுகால்முன்னும்வைத்து இடக்கால்பின்னாக
வரிசைப்படிபாய்ந்து
சிலம்பத்தால்பின்வாங்கி ஒதுங்கிப்பதுங்கி
சீறியேதானடிக்க
அடியதனைத்தட்டிவிட்டு புருவம்நெரித்து
அக்கினிபோல்கண்சிவந்து
முடியொடு கைகாலொடிய வீமனடித்தான்
முட்டியேதுர்ச்சாதனனும்
வீமன்மேலேபாய்ந்து கதாயுதத்தாலே
மேனியெங்குந்தானடிக்க
கோமானெனும்வீமன் துர்ச்சாதனன்மயிரை
கூட்டோடேதான்பிடித்து
தூக்கியேதான்சுழற்றி நெல்கதிரைப்போலே
துடியாகத்தானடித்து
வாக்கினாலேயேசி காலால்ளனும்பொடிய
வதக்கிக்கையால் கசக்கி
மிதிமிதியென்றேமிதித்து குடும்பியைப்பிடித்து
வேகமுடனே தூக்கி

சரியாகவேசுழற்றி பன்றிக்குட்டியைப்போலே
சதாகதிமைந்தன்பிடித்து
நிமிர்ந்தெதிரேநிற்கின்ற கர்ணராஜனுக்கும்
நேர்ந்ததுரியோதனற்கும்
சமர்செய்யும்வீரருக்கும் சகுனிமுதலான
தாஷ்டீகர்யாவருக்கும்
காட்டியேயாரையுமரைந்து சகலருங்கேளுங்கள்
கடியதுர்ச்சாதனனை
நாட்டிவிதோகொல்லுகிறேன் காப்பாருண்டானால்
நலமாய் வெளிப்படுங்கள்
இதுசமயங்காராவிட்டால் இளவரசனை நீங்கள்
இனிக்காணப்போவதில்லே
மகிமிகுந்தராஜாக்களே என்றுவெகுவாக
மதவீமன் தான் கூறி
போர்க்களமெல்லாந்திரிந்தும் சுயோதனன்மற்றோரும்
பொருதியேநெஞ்சுழன்று
பார்த்தோடினார்களன்றி ஒருவராகிலும்வந்து
பாவியைக்காப்பாரிலேயே
உருத்திராமிசையாக வீமன்வெகுண்டு
ஓங்கியேதானடித்து
சுருக்காக கீழ்போட்டு தேகத்தின்மேலே
சூட்சமாய்த்தானிருந்து
நெஞ்சந்தனைப்பிளந்து உதிரத்தையள்ளி
நேராய்பொசித்திடவே
அஞ்சனவண்ணன்பார்த்து கொப்பளித்துத்துப்பென்றான்
ஆதிநாராயணனே
அந்தப்படிவீமன் கொப்பளித்துத்துப்ப
அருஞ்சபதந்தீர்ந்திடவே
இந்தப்படைமுழுதும் இன்றுகொல்வேனென்று
எழுந்தாகூத்தாடினனே
கூத்தாடும் வீமனொடு பத்துப்பேர் தம்பியோடு
துர்ச்சாதனனிரந்தும்

பார்த்திருந்தாயல்லாது யாரேனும் வீமனைப்
பகைத்துவென்றோர் யாருமில்லை
யென்றறிந்தசல்லியனும் கர்ணனைப்பார்த்து
யெங்கள்சேனுபதியே
நன்றுநன்றுஉன்னெதிரே துர்ச்சாதனனை
நமன்போல்வீமன்பிடித்து
காட்டியேயாரேனும் கார்க்கவல்லாருண்டா
கதையாற்கொல்லப்போறேன்
மீட்டச்சமத்திருந்தால் வாருங்களென்று
விளம்பிடபேடியைப்போல்
பார்த்திருந்தாயல்லாது வீமனைஜெயிக்கப்
பலமுள்ளவநீதானு
நேமிக்கிருஷ்ணன்சாரதியாய் வருந்தனஞ்சயனை
நீயாஜெயிக்கிறது
உன்னைநம்பியித்துரியன் உலகாளவேநினைந்தான்
ஒன்றும் நடவாது அவன்
தன்கைவாளால்கழுத்தை தானறுத்துக்கொண்டு
தான்மடிவதுத்தமமாம்
உலகோருடன்வீரர் உன்னைவசைசெய்ய நீ
உயிர்வைத்திருப்பதிலும்
தலமீதிலிப்போதுசெத்தால் நன்மையாமென்று
தானுரைத்தான்சல்லியனே
சூரியகுமாரன்கேட்டு தாயார்க்குரைத்த
சொல்லைமனதில்வைத்து
காரியமாய்ச்சல்லியனே மகராஜன்தம்பி
கதாயுதத்தினலிரந்த
விசனத்தால் மெய்மாந்து இருந்தேனல்லாது
வித்தகனே பாம்பினுக்கு
எஜமானுகியகெருடன் அஞ்சுமோசிங்கம்
இருளானைக்கஞ்சிடுமோ
என்றுநயமாயுரைத்து கதாயுதனையிப்போ
என்கணையால்வாட்டுகிறேன்

மன்னனிவனுரைத்து ஓடுகின்றவீரரை
வரவழைத்துகூட்டமதாய்
பூகமது தான்வகுத்து பொன்னெடுந்தேரேறி
உரமானவில்பிடித்து
வேகமாய்வந்திடவே திட்டத்துய்மன்சேனையொடு
வீமன்யெதிர்வந்துநின்று
கோபாக்கினியுடனே பாரினில்வில்வளைத்து
கொடுமையுள்ளபாணமொடு
தாபாக்கினிக்கணையும் வாய்வுவருணக்கணையும்
தாமோதரக்கணையும்
அனேகந்திவ்யாஸ்திரத்தால் வீமனடிக்க
அங்கர்கோன்பாணமதை
சோனைமாரியாய்ப்பொழிந்தும் பயன்படாதாலே
சூரியன்மகன் இஞ்சிநின்றான்
சேனாபதியிவனோக்க சஞ்சத்தகர்முதலோர்
சீறியஸ்வத்தாமனுமே
நாலாவிதக்கணைகள் தூவிப்போர்செய்யும்
நல்லசமயந்தனிலே
கர்ணன்மகன் விடசேனன் நவமணித்தேரேறி
கல்மலைக்கொப்பானவில்லை
விற்பனமதாய்வளைத்து அக்கினிபோல்பாணம்
விரைவாயிழுத்துவிட்டு
நகுலனோடுவந்தெதிர்த்து போர்செய்திடவே
நரன்தம்பிகோபமுற்று
வெகுசரத்தால்விடசேனன் பாணமதைவெட்டி
வில்லையுந்தூளாக்கிடவே
மறுவில்தனை எடுத்து மந்திரக்கணைகள்
மாவேகமாய்விடுத்து
ஒருவரெதிரில்லாத நகுலராஜன்வில்லை
ஒடித்திரண்டதாகவெட்டி
பின்னுமோராஸ்திரத்தால் நகுலன்மார்பிபில்குறியாய்
பிரையோகம்செய்திடவே

விட்ட அஸ்திரம்பாய்ந்திடவே நகுலன் மூர்ச்சையதாய்
 விழுந்தான் தேர்த்தட்டினிலே
விடசேனனால்நகுலன் அடிபட்டானென்று
 வீரர்சொல்ல அர்ச்சுனனும்
மடமடவென்றேரதத்தை மாலோன்நடத்த
 மலைபோன்றதோள்குலுங்க
மின்னற்கணைசிலது தூண்டியவன்விட்டு
 மீளும்விடசேனன்
தன்னைபிடிக்கவென்று தனஞ்செயன்கணைகள்
 தானேவிட அவனும்
கலீரெனவேதாநகைத்து அர்சுனன்தொட்ட
 கணைகளெல்லாம் வெட்டிடவே
பலிசெய்யவேணுமென்று பார்த்தன்கணையேவி
 பகலவன்பேரன்தேரை
உடைத்துவில்லைவெட்டிடவே வேறேதேரேறி
 உகாந்தகாலாக்கினிபோல்
திடமாய்சரந்தொடுக்க சரங்கள்செந்தணலாய்
 திரண்டுவருந்தன்மைகண்டு
வடவனல்போற்கோபமதாய் அக்கினியஸ்திரங்கள்
 வரிசையாய் நூறுவிட்டு
விடசேனன்வில்லொடுதேர் கொடிபாகனையறுத்து
 விசையன் மிகக்கொதித்து
அர்த்தசந்திரபாணமதால் விடசேனன்தலையை
 அரசர்களெல்லாம்பார்க்க
யுத்தம்செய்போர்க்களத்தில் வெட்டிவீழ்த்திடவே
 உம்பரெல்லாம் பார்த்துநிற்க
கர்ணன்மகன்தலையை ஒருபாணத்தாலே
 கர்ணன்ரதந்தனிலே
சமர்த்தாகப்போட்டிடவே மகன்தலையைப்பார்த்து
 சரீரமெல்லாம் நொந்தழுதான்
அருமையுள்ள என்மகனே அர்சுனன்கணையால்
 அமர்க்களத்தில்மாண்டாயே

பிரமன்எழுத்திதுவோ மைந்தனேயென்று
புலம்பினான்மெத்தவுமே
குபீரென்றுஎன்வயிற்றில் மண்ணைபோட்டாயோ
குழந்தையுனைகாண்பதெப்போ
பாண்டவர்கள்தன்படையை க்ஷணத்திலழித்து
படுதியதாய்க்கொழுத்தி
களத்தில்நின்றவீரர்களை ஜெயித்தவீரியத்தை
கண்மணியேயென்னிடத்தில்
அருமையாய்ச்சொல்வாயென்று எதிர்பார்த்திருக்க
அரசேமடிந்தாயே
மகனேவிடசேனு நான்என்னசெய்வேனென்று
மாரிமாரியே புலம்ப
சாட்டையில்லாப்பம்பரமா யாடும்துரியோதனனை
சார்ந்தஅஸ்வத்தாமா
இருவருமொன்றாய்க்கூடி இரவிகுமாரன்
இருக்குமிடத்தேசேர்ந்து
வருத்தமடைகின்றகர்ணன் மனதைமிகதேற்றி
வணங்காமுடியோதுரைப்பான்
உன்மகனேடேயெனது தம்பியிறந்தானென்று
ஒருகவலைவையாதே
இன்றோர்கணையாலே அர்சுனனைக்கொன்று
இருதயமகிழ்ந்திடுவாய்
அண்ணுவெனவுரைக்க கர்ணன்கோபாக்கினி
அதிகரித்துராஜாவே
கண்ணன்தேரோட்டுகின்ற காண்டீபன்தன்னை
களத்தில்சிரசறுத்து
வருகிறேனென்றுரைத்து சல்லியராஜாவேயுந்தன்
வல்லமைநான்பார்த்திடவும்
அரசருனைகொண்டாட ரதத்தைவிடுமென்று
அதிகோபமாயுரைக்க
சல்லியராஜன்கேட்டு அங்கதேசாதிபா
சகுனத்தடையாகுதிப்போ
அல்லவிலாப்பூமியது நடுங்குதுன்கொடிமேல்
அடித்தழுகுதேகாக்கை

மேகமதாயில்லாமல் ஆகாசத்திடிகள்
வெகுவாய்விழுகுதிங்கே
தகதகவென்றொளிவீசும் ஆயுதமுனைகள்
தான்கருகிமங்கிடுதே
வாசமலர்மாலைகள் கருகிப்புலால்நாற்றம்
வாசிக்குதே இடத்தோள்
நேசித்திடதுகண்ணுந் துடிக்குதுயானைகுதிரை
நோாயமுகுதிங்கே
பிசாசுகூத்தாடுகுது நவரத்னமுடிகள்
பித்தளையாய்த்தோணுகுது
அசாத்யமாகப்பகலில் நட்சத்திரம்வீழ்ந்து
அபசகுணமாகுதிப்போ
நிராகரித்தின்றைப்போரை கடத்திவிட்டோனே
நீபோயெதிர்த்தாக்கால்
மாபாரதமுடிந்து பஞ்சவரைஜெயித்து
வாழ்வாய் சுயோதனனோடு
என்வார்த்தைகேளாமல் இப்போதர்ச்சுனனோடு
எதிர்த்துப்போர்செய்தாக்கால்
உன்வீரமுமழிந்து தனஞ்செயனம்பாலே
உயிரிழந்துமாண்டிடுவாய்
கர்ணனெனவுரைக்க யின்றைக்கென்நாகக்
கணையால்காண்டீபனுயிர்
சொற்பமாய்வாங்கிடுவேன் தவறினல்பார்த்தன்
தொடுங்கணையால் மாண்டிடுவேன்
யானைதனத்குபயந்து சிங்கம்பின்வாங்குமா
யானும்பின்வாங்குவேனு
சேனைத்தலைவர்புகழ் சல்லியனேயெந்தன்
தேரைவிடுமென்றுரைத்தான்
சல்லியராசன்கேட்டு கர்ணன்சூரியன்யாரும்
சமர்க்களத்தில் மாண்டிடுவார்
எல்லோரும்போற்றிசெய்ய தர்மபூபதிதான்
இவ்வுலகையாண்டிடுவார்

வினையின்பயனிதுதான் என்றேவெறுத்து
விண்ணோர்கள்பார்த்திருக்க
மன்னர்கள்நிக்கும்சபையில் முட்கோலால்குதிரையை
வாரினாலே அடித்து
கர்ணனுவிஜயம்பெறவென்று அவன்மனப்பின்னாக
கர்ணன்தேர்முன்னாக
விற்பனமாய்த்தூண்டிவிட்டான்சாரதித்தொழிலில்
மேன்மைபெற்ற சல்லியனே
அங்கதேசாதிபதி சிங்கம்போற்சீறி
ஆக்ரமித்துவில்வளைத்து
ஓங்கி சப்தமேகமது வரிசித்தாப்போல்பாணம்
ஓயாமலேவிடுத்து
பாண்டவரின்சேனைகளை முனைகுலைந்தோட
பழாக்கினான் கர்ணன்
காண்டாவனந்தானெரித்தோன் அழியாரதத்தை
கண்ணன்விடத்தானிருந்து
வீமனோடுதம்பியரும் சாத்தகிமற்றோரும்
வெந்தணல்போல்சூழ்ந்துவர
காலனைப்போலர்ஜுனனும் கர்ணனும்நேரில்
கலங்காமல் போர்புரிய
இரண்டு கருங்கடல்தானும் எதிர்த்தடித்தாப்போலும்
இருபாகமாய்ப்பிரிந்து
இரண்டுகாலாக்கினியும் திசாதிசையெரித்தாப்போல்
பிரசண்டமாருதம்போல்
பகைத்துஎதிராகநின்று ஆகாசம்பூமி
படபடெனப்பாணம்விட்டு
திகையாதிருபேர்கள் விட்டபாணத்தால்
தேவர்முதல்யாவர்களும்
கலங்கிடவே அந்தரத்தில் இந்திரன் பிரமன்
கயிலாச வாசகரும்
அலங்காரமாய்ப்பார்த்து ஈசன்பாதத்தில்
அபனார்பிகவணங்கி

இருவர்விட்டபாணமது உலகம்அழிந்து
எரிந்துவிடும்போலிருக்கு
கர்ணன்ஜெயிப்பானு காண்டீபன்வெல்வானு
கடவுளேளென்றுரைக்க
திரிபுரசம்ஹாரகர்த்தன் சொல்லுவாரப்போது
திரியோதனன்பாவி
அரியோனின்மைத்துணரை செய்தகொடுமைக்கு
அங்கதேசாதிபதி
உதவியானான் விஜயன் முன்னாள் நமைக்கோரி
உலகில்அருந்தபசு
சதமாகச்செய்ததினால் பாரதப்போரில்
சகலரையும்வென்றிடவே
வரமோடு அஸ்திரமும் கொடுத்தோமதனால்
மாவுலகிலின்றுதினம்
திறமாய்க்கர்ணன்சாவான் விஜயன்வெல்வானென்று
ஜெகதீஷன் செப்பிடவே
பிரமன்மகிழ்ந்தான் தேவேந்திரன்கூத்தாடினான்
பேரண்டத்தேவரெல்லாம்
விரசாகப்பூமாரி விஜயனோடு மாலுக்கும்
மேலோர் பொழிந்தனரே
போர்க்களத்தில் கர்ணனொடு அர்ஜுனனும்நேர்ந்து
போர்புரிந்தவேளையிலே
வாய்ந்தபேரோசையது இன்னவிதமென்று
வகுக்கயாராலுமுண்டோ
ஓசையாலண்டரண்டம் பொடியானால்பின்பு
உண்டாக்கவேணுமென்று
திசைமுகனும் பிர்மாவும் கலங்கினான்மலைகள்
திவலையாய்த்தான்பொடிந்தால்
கயிலைமலைக்கென்செய்குவோம் என்றேசிவனார்
கருதியோசித்திடவும்
ஐராவதந்தானும் கண்மூடத்தூசி
அதிகரித்து ஏழ்கடலை

தரையாக்கினல்நமக்கு யோகநித்திரைசெய்ய
தகுந்தயிடமில்லையென்று
நிரைந்தபரமாந்திருமால் மனதில்னினைத்திடவும்
நேர்ந்தகுருச்சேத்திரத்தில்
குதிரைகளுடன்குதிரை எதிரில் முட்டியிடிக்க
கொல்லுகின்ற ஆயுதங்கள்
விதியமயொன்றோடொன்று இளைந்து புகைந்து
மின்னலிடவேயுரசி
யானைகளுடன் யானை அடித்துமுட்டிபகைக்க
அதிரதர்கள் தேரொடுதேர்
தான்சுழன்றுவேகமதாய் காற்றெனக்கொடிபறக்க
தார்வேந்தர் வேந்தரொடு
முடிகியே போர்புரிய கர்ணனும் அர்ஜுனனும்
முனைந்துவில்லைக்கைபிடித்து
திடுக்கிட்டிடப்பாணம் திசாதிசைகளெல்லாம்
சிதறும்படிவிடவே
கைவில்நிமிராமல் கையும்ஓயாமல்
காலாந்தகக்கணைகள்
தெய்வகணைமுதலாய் பூசித்துவிட்டு
தேவதத்தமானசங்கம்
பூரித்தானர்ச்சுன்னும் உலகமெங்கும்நடுங்க
பூசிததுவிட்டகணை
சீரியேகர்ணனுட தேகத்தில்வண்டுபோல்
சிறப்பாகமொய்த்திடவே
நிரைநிரையாய் திரைதிரையாய் பரபரவெனவும்
நீண்டசரங்கள்தானே
குரையாமல்பாணமதை போதுமென்றமட்டும்
கூசாமல்விட்டடிக்க
அங்கதேசாதிபதி பாரபரமெனும்சங்கை
அற்புதமாய்வாயில் வைத்து
சிங்கம்போலூதிடவே ஓசையினலண்டர்
செவியடைக்க லோகமெங்கும்

கலங்கிடவே கர்ணனப்போ வாய்வாஸ்திரத்தால்
காண்டீபன் பாணமதை
அலமலங்கத்தானடித்து அக்கினியாஸ்திரத்தை
அர்ச்சுணன்மேல்விட்டிடவே
வருணாஸ்திரந்தொடுத்து அனல்கணையைவெட்ட
மகாவேகமாய்க் கனைத்து
பிர்மாஸ்திரம் விடவே பிர்மாஸ்திரம்விட்டு
பேரிடிபோல் வெட்டிடவே
இந்திராஸ்திரம் சூரியாஸ்திரம் பூஜைவிதிசெய்து
ஏவினான் கர்ணனப்போ
சந்திராஸ்திரம் மந்திராஸ்திரம் விட்டு வெட்டிவிட்டான்
சணத்திலந்த அர்ச்சுணனே
தேவாஸ்திரங்களெல்லாம் பாழாகக்கண்டு
தியங்கிவெகுயோசனையாய்
காவலாய்வைத்திருந்த நாகபாசக்கணையை
கைதனிலே தானெடுத்து
அர்ச்சுணனை யிச்சணமே கொன்றுபகைதீர்க்க
ஆலோசித்தேயவனும்
கெர்ச்சித்து முன்னாளில் காண்டாவணமெரிக்க
கேசரத்தில் தப்பிவந்து
அடைக்கலமாயென்னிடத்தில் வந்தநாகமேயுனது
அரும்பகைவனர்ச்சுணனை
தடையில்லாமற்றலையை அறுத்துவருவாயென்று
தானுரைத்து கர்ணனுமே
ஐந்துதலைநாகமதை திருமஞ்சனமாட்டி
அங்கமெலாம் நீர்துவட்டி
தேய்த்தசந்தனத்துடனே புனுகுஜவ்வாதணிந்து
சிவந்தகுங்குமம்பூட்டி
தேனொழுகும் வண்டுமொய்க்கும் வாசனைநிறைந்த
திவ்யமலர் மாலையிட்டு
ஞானமந்திரார்ச்சனைகள் பிரார்த்தனைசெய்து
நலமாய்ப்பசி அடங்க

அனேக கலப்பாலூட்டி ஆசாரமாய்வணங்கி
அன்புருகித்தன் குருவாம்
வானோர்கள் கொண்டாடும் பரசுராமர்பாதத்தை
மனதில்நினைத்தேதுதித்து
கையிற்கணையெடுத்து நாணியிற்பூட்ட
காதளவுமேயிழுக்க
ஐயாகொடைக்கர்ணா அவசரப்படாதே
அரவக்கணையதனை
அர்ச்சுனன்தேகமதில் எங்கேகுறிவைத்து
அடிக்கிராய்சொல்லெனவே
மெச்சிடவே லோகமெல்லாம் கழுத்தில்குறிவைத்து
விடுகிறேனென்றுரைக்க
வெகுபிரயாசத்தோடே வளர்த்தநாகாஸ்திரத்தை
விருதாவாய்ச் செய்யாதே
மகிமையாய் நானுரைத்தபடிசெய்வாயென்று
மகிழ்ந்துரைப்பான் சல்லியனே
வாசத்துளபமணி மாயவஞ்சகனும்
மணிவண்ணனங்கிருக்க
நேசமாயாதேனும் வஞ்சகஞ்செய்வான்
நீயும்நாகாஸ்திரத்தை
தனஞ்சயன் நெஞ்சிற்படவே விடுதப்பினாலுமவன்
தன்கழுத்தைவெட்டுமது
கணைதவறினாலுமவன் மண்டையுடைந்திறப்பான்
கர்ணாவெனவுரைக்க
காலவித்தியாசத்தாலும் முடிவுகாலத்தாலும்
கருத்திலதைக்கொள்ளாமல்
மேலோன்பரசுராமன் மனமகிழ்ந்துதந்த
வில்லிற்கணைபூட்டி
காதளவுமேயிழுத்து அர்ச்சுனன்தலையைக்
கண்டிப்பாய்நீயறுத்து
நீதவறாதேவருவாய் என்றுரைத்துவிட்டான்
நேரிரவிமைந்தனுமே